16.	எல்.டபிள்யு.எஸ். குலரத்ன ஈ.எம்.ஏ.எம். எதிரிசிங்க	மொழிசார் செயற்பாடுகளினூடாக ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்கும் ஆறாமாண்டு மாணவர்களின் கட்டுரையாக்கத் திறனை மேம்படுத்துதல்
17.	ஜே.ஏ.எம்.பி கருணாரத்ன கே.பி. அபேஷிகா கவிந்தி	ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்கும் ஒன்பதாமாண்டு மாணவர்களின் சொல்வளத்தை மேம்படுத்தும் பொருட்டு காணொலிக் காட்சிகளைப் பயன்படுத்துதல்

18.	டி.டி.டி சுரவீர டி.எம்.டி.என.கே திசாநாயக்க	நடைமுறை வாழ்க்கைச் சூழல்களில் பேச்சு ஆங்கிலத்தை வளர்த்துக் கொள்வதில் முன்னாயத்தமற்ற பேச்சுகளின் (Impromptu Speeches) தாக்கம்
19.	ஏ.ஏ. குணவர்தன பி..எம். சூரியாரச்சி	இரண்டாம் நிலைப் பாடசாலை மாணவர்களின் எழுத்துக் கூட்டற் திறனை மேம்படுத்தும் பொருட்டு பல்லூடக சாதனங்களைப் பயன்படுத்துதல்
20.	டி.டி.டி சுரவீர எஸ்.ஆர்.சி. ரங்கண	குறுஞ்செய்தி எழுத்துமுறை காரணமாக ஆங்கிலச் சொற்களின் எழுத்துக் கூட்டலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்: இரண்டாம் நிலைப் பாடசாலை மாணவர்களிடையே மேற்கொள்ளப்பட்ட ஆய்வு
21.	எல்.எச்.டி.எல். ரணசூரிய டபிள்யு.டபிள்யு.எஸ்.டி. சந்திரசேன	ஆசிரியரும் மாணவரும் மொழிகளைக் கலந்து பேசுதல்: இரண்டாம் மொழி ஆங்கில மாணவர்களுக்கும் ஆசிரியருக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட ஆய்வு
22.	சந்தன திசாநாயக்க சஞ்சீவி மீகஸ்தென்ன	ஆங்கில மொழி கற்பித்தலில் இளங்கல்விமாணிப் பட்டத்தைத் தொடரும் மாணவர்கள் இத்துறையைத் தேர்ந்தெடுப்பதில் மேலதிக மொழியியற் காரணியாக அவர்களின் குடும்பப் பின்னணி செலுத்தும் தாக்கம்
23.	எல்.டபிள்யு.எஸ். குலரத்ன ஏ.கே.என். டில்ருக்ஷி	இரண்டாம் நிலைக் கல்வியைத் தொடரும் சிங்கள மாணவர்களின் இரண்டாம் மொழி எழுத்தாற்றலில் அவர்களின் தாய்மொழி செலுத்தும் தாக்கம்
24.	எல்.எச்.டி.எல். ரணசூரிய பி.எம். ஜயசிங்க யு.எம். அபேகுணவர்தன	தேர்ந்தெடுக்கப்பட்ட சில இலங்கை ஆங்கிலச் செய்தித்தாள்கள் மற்றும் பத்திரிகைகளில் வெளியாகும் தகவல் தொடர்புத் துறை தொடர்பான ஆங்கில மொழி ஆக்கங்களில் சிங்கள மொழி செலுத்தும் தாக்கம்
25.	சந்தன திசாநாயக்க பி.ஏ. மல்லவராச்சி ஆர்.எல்.டி.கே.கே. விஜேரத்ன ஏஸ்.கே.டி. எயோஸ் வேஜின்	இருவரின் தனித்த அடையாளத்துக்கான போராட்டம்: *Mrs. Warren's Profession*
26.	சந்தன திசாநாயக்க ரேணுகா ராஜரட்ணம் நுஹா பஸ்லான் நதியா நாதன்	இரண்டு இலங்கை நாவல்கள் ஊடாக பெண்களின் துன்பங்களைச் சித்தரிக்கும் பாங்கு பற்றிய ஆய்வு: *The Village in the Jungle மற்றும் The Road from Elephant Pass*
27.	சந்தன திசாநாயக்க ஏ.நரோஷா எஸ். சலஞ்சா எஸ். சிவமாதங்கி	தழுவல்: ஆர்தர் மில்லரின் Death of a Salesman நாடகப் பிரதியுடன் ஒப்பிடும்போது அந்நாவலைத் தழுவி வோல்கர் ஸ்கொண்டர்.்ப் உருவாக்கிய திரைப்படக் கதாபாத்திரங்களின் உணர்ச்சிகள் எந்த அளவுக்கு சித்தரிக்கப்பட்டுள்ளன?
28	சந்தன திசாநாயக்க உதார சேனரத்ன ஹர்ஷனி செவ்வந்தி	எமிலி டிக்கின்சன் ஓர் தனிமை விரும்பியாக: தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகளின் பொருட் பகுப்பாய்வு
29	சந்தன திசாநாயக்க எரந்தி வீரசிங்க டிலானி ரணசிங்க	லக்தச விக்கிரமசிங்கவும் கமலா விஜயரத்னவும் தமது கவிதைகளில் இலங்கை அடையாளத்தைப் பிரதிபலிக்கும் விதம்
30	சந்தன திசாநாயக்க ஐ.எச்.எச். கவிந்தி டபிள்யு.ஐ.டி.எஸ். சுபசிங்க சி. இத்தகொட	The House of Bernarda Alba மற்றும் 'Mrs. Warren's Profession என்ற நாடகங்களில் வரும் பால்நிலை அடிப்படையிலான பாத்திரங்களை விக்ரோறியாச் சமூகம் எவ்வாறு அணுகியது
31	சந்தன திசாநாயக்க பி.கே.டி.ரி. சச்சித்ரா	*"A Prayer for My Daughter"* என்ற கவிதையில் வரும் மவுட் கோன்னே மற்றும் வை.பி யீற்ஸ் ஆகியோருக்கிடையேயான உறவு பற்றிய மதிப்பாய்வு.
32	சந்தன திசாநாயக்க கே.ஜி.டி.எம் குணவர்தன	'கவிதை மகிழ்ச்சியில் தொடங்கி ஞானத்தில் முடிவடைகிறது' என்ற ரொபேட் .்ப்ரொஸ்ரின் பார்வை மற்ற நான்கு கவிஞர்களின் படைப்புகளுக்கும் பொருந்தும்

6.11 பீடச் சபைக் கூட்டங்கள்

கொவிட் தொற்றுப்பரவல் காரணமாக விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகரளக் கருத்திற்கொண்டு ஒவ்வொரு மாதமும் பீடச் சபையின் கூட்டங்கள் நடத்தப்படவில்லை எனினும் அவ்வப்போது இணையவழிக் கூட்டங்கள் நடைபெற்றன. அவைபற்றிய விபரங்கள் வருமாறு.

பீடக் குழுக் கூட்ட எண்.	மாதம்	நடைபெற்ற திகதி
01	பெப்ரவரி	06-02-2020
02	மாச்	05-03-2020
03	ஜூலை	02-07-2020-
04	ஓகஸ்ட்	13-08-2020-
05	செப்ரெம்பர்	10-09-2020
06	ஒக்ரோபர்	18-10-2020
07	டிசெம்பர்	10-12-2020

6.12 மாணவர் பிரதிநிதிகளின் விவரங்கள்

திரு ஜி.பி. அனுரங்க விஜேதுங்க கல்விப் பீட பீடக்குழுவின் மாணவர் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார்.

6.13 மாணவர் செயற்பாடுகள் / சாதனைகள்

விரிவுரைகள் இணையவழி நடைபெற்றபோதும்நடத்தப்பட்டாலும், பல்கலைக்கழகம் பெரும்பாலும் மூடப்பட்டிருந்ததால் பீடத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மாணவர் ஆய்வமர்வு: 2020 தவிர மாணவர் பங்கேற்கக்கூடிய சிறப்பு நிகழ்வுகள் எதுவும் நடைபெறவில்லை.

6.14 2021ஆம் ஆண்டிற்கான இலக்குகள்

பல்கலைக்கழகத்தின் கொள்கை முடிவின்படி, தகவல் தொழில்நுட்ப பீடம் என்ற பெயரில் ஒரு புதிய பீடம் 2019 டிசம்பரில் நிறுவப்பட்டதோடு தகவற் தொடர்பாடற் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவப் படிப்புகளுக்கான பட்டநிகழ்ச்சித்திட்டங்களும் புதிய பீடத்தால் வழங்கப்பட இருந்தன. மொழிக் கற்கைகள் துறை, கல்வி மற்றும் பயிற்சித் துறை என்பன கல்வி பீடமாகப் பெயர் மாற்றரப்பட்டுள்ள பீடத்தின்கீழேயே தற்போதும் உள்ளன.

2021 ஆம் ஆண்டில் பீடத்தால் வழங்கப்படும் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் யாவும் மாணவர்களுக்கு அதிகபட்ச நன்மைகளை வழங்குவதற்கான தர உத்தரவாதத்துக்கு அதிக முக்கியத்துவம் அளித்து நடாத்தப்படும். அனைத்துப் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களையும் நான்காண்டுச் சிறப்புப் பட்டங்களாக நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இணையவழி படிப்புகளை நடாத்துவதுதல் செய்முறைப் பரீட்சைகளை குறைந்தளவிலான மாணவர்களுடன் சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைவாக பல்கலைக்கழக வளாகத்தில் நடாத்துதல் என கொவிட் தொற்றால் ஏற்பட்ட சவால்கள் திருப்திகரமான முறையில் கையாளப்படுகின்றன.

6.15 புதிய நிகழ்ச்சித்திட்டங்கள்

6.15.1 பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டங்கள்

முதுமாணி மட்ட நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு முன், அனைத்து பட்ட நிகழ்ச்சித்திட்டங்களிலும் நான்காண்டு சிறப்புப் பட்டங்களை அறிமுகப்படுத்த கல்விப் பேரவை எடுத்த முடிவின்படி, 2020ஆம் ஆண்டில் தொடங்கப்படவிருந்த கல்வி முகாமைத்துவத்தில் முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் பிற்போடப்பட்டது. அனைத்து கல்வித் நிகழ்ச்சித்திட்டங்களின் இணையவழி நடாத்தும் முறை மேம்படுத்தப்பட உள்ளது. அதிக மாணவர்களை உயர்கல்வி கற்கும் வாய்ப்பபை வழங்கும் பொருட்டு மாணவர் சேர்க்கையை அதிகரிக்க அதிகரிக்க பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

6.15.2 பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

2021ஆம் கல்வியாண்டில் மொழிக் கற்கைகள் துறையால் மொழிபெயர்ப்புக் கற்கைகளில் இளங் கல்விமாணி என்ற புதிய பட்ட நிகழ்ச்சித்திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இதற்கான பாடத்திட்டத்தை உருவாக்கும் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

6.15.3 தொழிற்கல்வி மற்றும் பயிற்சித்துறைப் பயிற்றுவிப்பாளர்களுக்கான புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம்

மேலும், 2021 செப்டம்பரில் தொடங்கவுள்ள கல்வியாண்டிலிருந்து வாரநாள் (B1) பிரிவில் தொழில்நுட்பத்தில் கல்வி இளமாணிப் பட்டத்தைத் தொடர்வதற்கான 40 புலமைப்பரிசில்களை NVQ 5 மற்றும் 6 தகுதி கொண்ட ஆசிரியர்கள் / பயிற்சியாளர்களுக்கு வழங்க கல்விப் பீடத்தின்கீழ் உள்ள கல்வி மற்றும் பயிற்சித் துறை தயாராக உள்ளது என்ற விடயம் அமைச்சின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும்.

6.15.4 மொழிகளில் சான்றிதழ்க் கற்கைநெறிகள்

2021ஆம் ஆண்டில் ஜப்பானிய, கொரிய, சீன, தமிழ், ஜெர்மன் மற்றும் பிரெஞ்சு மொழிகளில் சான்றிதழ்க் கற்கைநெறிகளை பணியாளர் மேம்பாட்டு மையத்துடன் இணைந்து நடத்துவதற்கு மொழிக் கற்கைகள் துறை நடவடிக்கை எடுக்கும்.

6.16தொழிற்றுறைசார் தொழில்நுட்பப் பீடம்

6.16.1 அறிமுகம்

தொழில்துறைசார் தொழில்நுட்பப் பீடம் 2019ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நிறுவப்பட்டதோடு 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பீடாதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டவுடன் பீடத்தின் செயற்பாடுகள் முறைப்படுத்தப்படும்.

இப்பீடத்தின் நான்கு துறைகளுமாவன,

1. விவசாயம் மற்றும் உணவுத் தொழில்நுட்பத் துறை
2. கணிய அளவையியற் துறை
3. திரைப்படம் மற்றும் தொலைக்காட்நி நிகழ்ச்சித் தயாரிப்புத் தொழில்நுட்பத் துறை
4. முகாமைத்துவக் கற்கைகள் துறை

அட்டவணை 6.7 பீடத்தால் வழங்கப்படும் பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

#	பட்டம்	நடாத்தப்படும் முறை
1.	கணிய அளவையியலில் தொழில்நுட்ப இளமாணி	வார இறுதி நிகழ்ச்சித்திட்டம் (B2)
2.	உணவுச் செயன்முறைத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	வார நாள் (B1) மற்றும் வார இறுதி (B2) நிகழ்ச்சித்திட்டம்
3.	திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	வார இறுதி நிகழ்ச்சித்திட்டம் (B2)
4.	ஊடகக் கலைப் படைப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	வார நாள் (B1) நிகழ்ச்சித்திட்டம்
5.	தொழிற்றுறைசார் முகாமைத்துவத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	வார நாள் (B1) மற்றும் வார இறுதி (B2) நிகழ்ச்சித்திட்டம்
6.	ஹோட்டல் முகாமைத்துவத்தில் இளமாணி	வார இறுதி நிகழ்ச்சித்திட்டம் (B2)

6.16.2 மாணவர் சேர்ப்பு – 2020/2021ஆம் கல்வியாண்டு

பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களைத் தெரிவுசெய்வதற்கான உளச்சார்புப் பரீட்சை 2020ஆம் ஆண்டு பெப்ரவரி 16ஆம் திகதி நடாத்தப்பட்டது. வாரநாள் மற்றும் வார இறுதி நாள் பிரிவுகளுக்கு விண்ணப்பித்த NVQ பரீட்சார்த்திகளுக்கான உளச்சார்புப் பரீட்சை நடாத்தப்பட்டது. உணவுச் செயன்முறைத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி தொழிற்றுறைசார் முகாமைத்துவத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி ஆகிய இரண்டு பட்ட நிகழ்ச்சித்திட்டங்களும் வார நாட்களிலும் வார இறுதி நாட்களிலும் நடாத்தப்பட்டன. திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி, கணிய அளவையியலில் தொழில்நுட்ப இளமாணி, ஹோட்டல் முகாமைத்துவத்தில் இளமாணி முதலான நிகழ்ச்சித்திட்டங்கள் தற்போதைக்கு வார இறுதி நாட்களில் மட்டும் நடாத்தப்படுகின்றன.
ஊடகக் கலைப் படைப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி என்ற வாரநாள் நிகழ்ச்சித்திட்டம் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்புத் தொழில்நுட்பத் துறையின்கீழ் நடாத்தப்படுகிறது.

உளச்சார்புப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர்கள் 2020/2021ஆம் கல்வியாண்டுக்கு அனுமதிக்கப்பட்டனர்.
கொவிட் -19 தொற்றுநோய்ப் பரவலையடுத்து அரசின் விதிமுறைகளின்படி மாணவர் சேர்க்கை மற்றும் பதிவுச் செயன்முறை என்பவற்றில் தாமதம் ஏற்பட்டது. மாணவர் சேர்க்கை 2020 செப்ரெம்பர் மாதம் தொடங்கப்பட்டபோதும் நாட்டு நிலைமை காரணமாக மீண்டும் பிற்போடப்பட்டது. ஆயினும் மாணவர் சேர்க்கை மற்றும் பதிவு என்பன 2021 மார்ச் மாதமளவில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேசிய தொழிற்கல்வி தகுதியில் (NVQ) 5/6ஆம் மட்டத்தைக் கொண்டுள்ள மாணவர்கள் வார இறுதி பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் மாணவர் கொள்ளளவைப் பொறுத்து உளச்சார்புப் பரீட்சை மதிப்பெண்களின் அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படும் அதேவேளை வார நாள்

நிகழ்ச்சித்திட்டங்கள் எனின் உளச்சார்புப் பரீட்சைப் பெறுபேறுகளைப் பொருட்படுத்தாது (NVQ) 5/6ஆம் மட்டத்தைக் கொண்டுள்ள மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. NVQ மாணவர்களுக்கு வாய்ப்பளித்த பிறகு, மீதமுள்ள வெற்றிடங்களுக்கு க.பொ.த உ/த Z மதிப்பெண் அடிப்படையில் க.பொ.த உ/த (தொழில்நுட்ப பிரிவினருக்கு முன்னுரிமை) மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

மாணவர் சேர்க்கை விவரங்கள் அட்டவணை 8.2 மற்றும் 8.3 இல் வழங்கப்பட்டுள்ளன. எந்தெந்தப் பட்டங்களுக்கு எந்தெந்த க.பொ.த உ/த பாடப் பிரிவுகள் நுழைவுத் தகுதிகளாகக் கருதப்படும் என்ற விவரங்களும் அவ்வகையில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையும் அட்டவணை 8.4 இல் வழங்கப்பட்டுள்ளன. NVQ மற்றும் க.பொ.த உ/த அடிப்படையில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை அட்டவணை 8.5 இல் வழங்கப்பட்டுள்ளது.

2020/2021ஆம் கல்வியாண்டில் மொத்தமாக 338 மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டனர்

அட்டவணை 6.8: மாணவர் சேர்ப்பு – தொழிற்றுறைசார் தொழில்நுட்பப் பீடம் - 2020/2021ஆம் கல்வியாண்டுக்கான வார நாள் நிகழ்ச்சித்திட்டம்

#	தொழில்நுட்ப இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டம்	பதிவுசெய்த மாணவர் எண்ணிக்கை
1	உணவுச் செயன்முறைத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	54
2	தொழிற்றுறைசார் முகாமைத்துவத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	53
3	ஊடகக் கலைப் படைப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	40
தொழிற்றுறைசார் தொழில்நுட்பப் பீடத்தின் வார நாள் நிகழ்ச்சித்திட்டத்தில் பதிவுசெய்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கை		144

அட்டவணை 6.9: மாணவர் சேர்ப்பு – தொழிற்றுறைசார் தொழில்நுட்பப் பீடம் - 2020/2021ஆம் கல்வியாண்டுக்கான வார இறுதி நிகழ்ச்சித்திட்டம்

#	தொழில்நுட்ப இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டம்	பதிவுசெய்த மாணவர் எண்ணிக்கை
1	உணவுச் செயன்முறைத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	52
2	தொழிற்றுறைசார் முகாமைத்துவத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	50
3	கணிய அளவையியலில் தொழில்நுட்ப இளமாணி	56
4	திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	21
5	ஹோட்டல் முகாமைத்துவத்தில் இளமாணி	15
தொழிற்றுறைசார் தொழில்நுட்பப் பீடத்தின் வார இறுதி நிகழ்ச்சித்திட்டத்தில் பதிவுசெய்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கை		**194**

அட்டவணை 6.10: க.பொ.த உ/த நுழைவுத் தகுதியாகக் கருதப்படும் பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

#	தொழில்நுட்ப இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டம்	கருத்திற்கொள்ளப்பட்ட க.பொ.த உ/த பிரிவு
5.	உணவுச் செயன்முறைத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	உயிர் அமைப்புத் தொழில்நுட்பமும் உயிரியல் விஞ்ஞானமும்
6.	ஊடகக் கலைப் படைப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைகளை ஒரு பாடமாகக் கொண்ட எந்தவொரு உ/த பிரிவும்
7.	தொழிற்றுறைசார் முகாமைத்துவத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	வணிகம், பொறியியற் தொழில்நுட்பம், பௌதிக விஞ்ஞானம்

அட்டவணை 6.11: 2020/2021ஆம் கல்வியாண்டுக்கான வெவ்வேறு பட்டங்களுக்காகத் இணைத்துக் கொள்ளப்பட்ட NVQ, க.பொ.த உ/த மாணவர்களின் எண்ணிக்கை

#	தொழில்நுட்ப இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டம்	NVQ	க.பொ.த உ/த

வாரநாள்			
9.	உணவுச் செயன்முறைத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	35	19
10.	ஊடகக் கலைப் படைப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	--	40
11.	தொழிற்றுறைசார் முகாமைத்துவத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	8	45
வார இறுதி			
12.	உணவுச் செயன்முறைத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	52	--
13.	தொழிற்றுறைசார் முகாமைத்துவத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	50	--
14.	கணிய அளவையியலில் தொழில்நுட்ப இளமாணி	56	--
15.	ஹோட்டல் முகாமைத்துவத்தில் இளமாணி	15	--
16.	திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	21	--

6.16.3 2020/2021ஆம் ஆண்டுக்கான மாணவர் சேர்ப்பு அங்குரார்ப்பண நிகழ்வு

2020/2021ஆம் கல்வியாண்டுக்கான தொடக்க விழா 2021 மார்ச் 09 அன்று ZOOM தளம் மூலம் நடத்தப்பட்டதோடு எல்லோரையும் சென்றடையும் விதமாக யூடியூப் மற்றும் பேஸ்புக் சமூக ஊடகங்கள்வழி இந்த நிகழ்வு நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. வார நாள் அணியினருக்கான ஆற்றுப்படுத்தல் நிகழ்வுகளை 2021ஆம் ஆண்டு மார்ச் 15, 16, 17ஆம் திகதிகளிலும் வார இறுதி அணியனரக்கான ஆற்றுப்படுத்தல் நிகழ்வுகளை 20 மற்றும் 21 ஆம் திகதிகளிலும் நடாத்தத் திட்டமிடப்பட்டது. ZOOM தளத்தைப் பயன்படுத்தி இணையவழியிலேயே ஆற்றுப்படுத்தல் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

வார நாள் மாணவர்களுக்கான அடிப்படைக் கற்கைத்திட்டம் (04 வாரங்கள்) நடத்தப்பட்டதோடு முதலாவது அரையாண்டை 15 வாரங்களில் முடிக்கத் திட்டமிடப்பட்டது. ஆற்றுப்படுத்தல் நிகழ்ச்சிக்குப் பிறகு வார இறுதி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடங்கப்பட்டு 22 வாரங்களுக்கு நடத்தத் திட்டமிடப்பட்டது. பீடங்களால் வழங்கப்படும் தொழில்நுட்ப இளமாணிப் பட்ட மாணவர்களின் தொகை அட்டவணை 7.6 இல் வழங்கப்பட்டுள்ளது.

அட்டவணை 6.12 மொத்த மாணவர் தொகை

பட்ட நிகழ்ச்சித்திட்டம்	2016 வார இறுதி	2017 வார நாள்	2017 வார இறுதி	2018 வார நாள்	2018 வார இறுதி	2019 வார நாள்	2019 வார இறுதி	2020 வார நாள்	2020 வார இறுதி
உணவுச் செயன்முறைத் தொழில்நுட்பம்	45	42	44	41	52	49	43	52	54
தொழிற்றுறைசார் முகாமைத்துவத் தொழில்நுட்பம்	24	42	20	40	33	40	41	53	50
திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்புத் தொழில்நுட்பம்	31	--	36	--	26	--	27	--	21
கணிய அளவையியல்	56	--	83	--	63	--	59	--	56
ஊடகக் கலைப் படைப்புத் தொழில்நுட்பம்	--	--	--	--	--	39	--	40	--

ஹோட்டல் முகாமைத்துவத்தில் இளமாணி	--	--	--	--	--	--	16	--	15
மொத்த எண்ணிக்கை	156	84	183	81	174	128	186	145	196

6.16.4 2020ஆம் ஆண்டு பீடத்தில் நடாத்தப்பட்ட பரீட்சைகள்

2020ஆம் ஆண்டு வார நாள், வார இறுதி அணிகளுக்கு பீடத்தில் நடாத்தப்பட்ட பரீட்சைகளின் விவரம் அட்டவணை 7.7இல் வழங்கப்பட்டுள்ளது.

அட்டவணை 6.13: 2020ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட பரீட்சைகள்

#	தொழில்நுட்ப இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டம்	முதலில் பதிவு செய்த ஆண்டு	நடாத்தப்படும் முறை	அரையாண்டிறுதிப் பரீட்சை
5.	உணவுச் செயன்முறைத் தொழில்நுட்பம் தொழிற்றுறைசார் முகாமைத்துவத் தொழில்நுட்பம்	**2016**	வார இறுதி	6ஆம் அரையாண்டு
6.	உணவுச் செயன்முறைத் தொழில்நுட்பம் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்புத் தொழில்நுட்பம் தொழிற்றுறைசார் முகாமைத்துவத் தொழில்நுட்பம் கணிய அளவையியல்	2017	வார இறுதி	4ஆம் அரையாண்டு
7.	உணவுச் செயன்முறைத் தொழில்நுட்பம் தொழிற்றுறைசார் முகாமைத்துவத் தொழில்நுட்பம்	2018	வார நாள்	3ஆம் அரையாண்டு
8.	உணவுச் செயன்முறைத் தொழில்நுட்பம் தொழிற்றுறைசார் முகாமைத்துவத் தொழில்நுட்பம் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்புத் தொழில்நுட்பம் கணிய அளவையியல்	2018	வார இறுதி	Semester 3
9.	உணவுச் செயன்முறைத் தொழில்நுட்பம் தொழிற்றுறைசார் முகாமைத்துவத் தொழில்நுட்பம் ஊடகக் கலைப் படைப்புத் தொழில்நுட்பம்	2019	வார நாள்	1ஆம் அரையாண்டு
10.	உணவுச் செயன்முறைத் தொழில்நுட்பம் தொழிற்றுறைசார் முகாமைத்துவத் தொழில்நுட்பம் கணிய அளவையியல்	2019	வார இறுதி	1ஆம் அரையாண்டு
	திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்புத் தொழில்நுட்பம் ஹோட்டல் முகாமைத்துவத்தில் இளமாணி			

6.17 2020ஆம் ஆண்டுக்கான வருகைதரு விரிவுரையாளர்கள்

பின்வரும் காரணங்களுக்காக பீடம் வருகைதரு விரிவுரையாளர்களின் சேவையைப் பெற்றுக்கொள்கிறது

- நிரந்தரக் கல்விசார் பணியாளர் பற்றாக்குறை
- தொழிற்றுறையுடனும் ஏனைய பல்கலைக்கழகங்களினதும் கல்வி நிறுவனங்களினதும் கல்விசார் பணியாளர்களுடனும் நட்புறவுகளை உருவாக்குதல்

அனைத்துப் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்காகவும் பல்கலைக்கழகத்தால் நியமிக்கப்பட்ட வருகைதரு விரிவுரையாளர்களின் விவரம் அட்டவணை 7.8இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 6.14 : 2020ஆம் ஆண்டின் வருகைதரு விரிவுரையாளர்கள் பற்றிய விபரம்

#	தொழில்நுட்ப இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டம்	முதலில் பதிவு செய்த ஆண்டு	நடாத்தப்படும் முறை	அரையாண்டு	வருகைதரு விரிவுரையாளர் எண்ணிக்கை
01	உணவுச் செயன்முறைத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	2017/2018	B2	05	-
		2018/2019	B2	04	9
		2019/2020	B2	02	7
		2017/2018	B1	06	3
		2018/2019	B1	04	10
		2019/2020	B1	02	4
02	கணிய அளவையியலில் தொழில்நுட்ப இளமாணி	2017/2018	B2	05	1
		2018/2019	B2	04	9
		2019/2020	B2	02	2
03	திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	2017/2018	B2	05	-
		2018/2019	B2	04	11
		2019/2020	B2	02	12
04	ஊடகக் கலைப் படைப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	2019/2020	B1	02	5
		2019/2020	B1	03	5
05	தொழிற்றுறைசார் முகாமைத்துவத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	2017/2018	B2	05	-
		2018/2019	B2	04	7
		2019/2020	B2	02	7
		2017/2018	B1	06	4
		2018/2019	B1	04	4
		2019/2020	B1	02	4
06	ஹோட்டல் முகாமைத்துவத்தில் இளமாணி	2019/2020	B2	02	5
		2019/2020	B2	03	6

6.18 தொழில்நுட்ப இளமாணிப் பட்ட மாணவர்களுக்கு வழங்கப்பட்ட விலக்களிப்புகள்

கல்விச் சபையால் ஒப்புதலளிக்கப்பட்ட விலக்களிப்புக் கொள்கையின் அடிப்படையில் மாணவர்களுக்கு விலக்களிக்கப்பட்டது. மாணவர்கள் NVQ 6 டிப்ளோமா அல்லது அதற்கு சமமான அல்லது உயர் தகுதி பெற்றிருந்தால் மட்டுமே விலக்குகளுக்கு தகுதியுடையவர்களாகக் கருதப்பட்டனர். மாணவர் டிப்ளோமா மட்டத்தில் சமமான பாடத்தை வெற்றிகரமாக முடித்திருந்தால் பாட அலகுகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. இதற்குச் சான்றாக மாணவர்கள் டிப்ளமோ கற்கைநெறியின் மூலப் பெறுபேற்று அறிக்கையை வழங்க வேண்டியிருந்தது.

விலக்குக் கோரும் மாணவர்கள் இரண்டு பிரிவுகளின் கீழ் விண்ணப்பிக்க வேண்டியிருந்தது. முதலாம் வகுதி மாணவர்களுக்கு விரிவுரைகள், செய்முறை வகுப்புகள், அரையாண்டிறுதிப் பரீட்சை உட்பட அனைத்து மதிப்பீடுகளிலும் இருந்து விலக்களிக்கப்பட்டது. எனினும் GPA ஐ கணக்கிடும் பொருட்டு குறிப்பிட்ட பாட அலகில் அவர்களது செயற்றிறன் சாதாரண தேர்ச்சிக்குச் சமமாக கருதப்பட்டது. இரண்டாம் வகுதி மாணவர்களுக்கு விரிவுரைகள், செய்முறை வகுப்புகளில் கலந்து கொள்வதில் இருந்து விலக்களிக்கப்பட்டபோதும் அவர்கள் தொடர் மதிப்பீட்டுப் பரீட்சைகளை முடித்து, அரையாண்டிறுதிப் பரீட்சைகளுக்குத் தோற்ற வேண்டியிருந்தது. இதன்படி, அம்மதிப்பீடுகளில் மாணவர்கள் பெற்ற பெறுபேறுகள் அவர்களின் GPA இல் கணக்கிடப்பட்டன.

மேலும், முழு அரையாண்டுகளுக்கும் விலக்குக் கோரி விண்ணப்பித்துத் தகுதி பெற்ற மாணவர்களுக்கு விலக்களிப்புக் கொள்கையின்படி அரையாண்டு விலக்களிப்பு வழங்கப்பட்டது. முதலாம் ஆண்டு முழுவதும் விலக்கு அளிக்கப்பட்டவர்கள் இரண்டாம் ஆண்டு முதல் பட்டப்படிப்பில் இணைந்துகொள்ள வாய்ப்பளிக்கப்பட்டது. முதல் அரையாண்டு முழுவதும் விலக்களிக்கப்பட்டவர்களுக்கு இரண்டாம் அரையாண்டிலிருந்து பட்டப்படிப்பில் இணைந்துகொள்ள வாய்ப்பளிக்கப்பட்டது. ஏனைய மாணவர்களுக்கு அவர்களின் கோரிக்கைகளின்படி விலக்களிப்புக் கொள்கையின் அடிப்படையில் பாட அலகிலிருந்தான விலக்களிப்புகள் வழங்கப்பட்டன.

6.19 தொழில் அடிப்படையிலான தொழிற்றுறைப் பயிற்சி

தொழில் அடிப்படையிலான தொழிற்துறைப் பயிற்சி என்பது தொழில்நுட்ப இளமாணி நிகழ்ச்சித்திட்டங்களில் முக்கியமானதும் கட்டாயமானதுமான ஓர் அங்கமாகும். ஐந்தாம் அரையாண்டில் வழங்கப்படும் இப்பயிற்சி ஆறு மாதங்களுக்கு நடைபெறும். மாணவர்கள் தேசிய தொழில்பயிலுநர் மற்றும் தொழிற்துறை பயிற்சி அதிகாரசபையுடன் இணைந்து தொழிற்றுறைகளில் அமர்த்தப்படுகிறார்கள். மாணவர்களின் தரப் புள்ளிச் சராசரி (GPA) கணிப்பில் இக்கூறு கருத்திற்கொள்ளப்படுவதால் மாணவர்களின் தொழில் அடிப்படையிலான தொழிற்துறை பயிற்சியை மதிப்பிடுவதற்கு விரிவான மதிப்பீட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டது.

6.20 பீடக் குழுக் கூட்டங்கள்

பீடக் குழுவின் கூட்டங்கள் ஒவ்வொரு மாதமும் நடத்தப்பட்டன. 2020ஆம் ஆண்டில் மொத்தம் 07 கூட்டங்கள் நடத்தப்பட்டன. கொவிட் - 19 தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக பீடக் குழுவின் எண்ணிக்கை வழமையான எண்ணிக்கையை விடக் குறைவாக இருந்தது.

6.21 பங்குபற்றிய போட்டிகளும் பொருட்காட்சிகளும்

கொவிட் - 19 தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக வழமையான பொருட் காட்சிகளும் போட்டிகளும் நடைபெறவில்லை

6.22 பொதுப் பட்டமளிப்பு விழா

பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவினை ஆண்டின் இறுதியில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தபோதும், கொவிட்-19 சூழ்நிலை காரணமாக அது நடைபெறவில்லை. ஆனால் பட்டத்தை வழங்க திட்டமிடப்பட்ட கல்வி ஆண்டுக்கான பரீட்சை முடிவுகள் இறுதி செய்யப்பட்டன.

6.23 பட்டப்படிப்புகளை இணையவழி நடாத்தும் செயன்முறை

2020 மார்ச் 23 முதல் கல்வித் திட்டங்களை இணையவழி நடத்தும் முறைக்கு மாறுவதற்கு தொழில்சார் தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் நடவடிக்கைகளை எடுத்திருந்தது. அந்த வகையில்

கொவிட் -19 காரணமாக ஊரடங்குகளுக்கு மத்தியில் கல்வித் திட்டங்களை இணையவழி நடாத்தும் பல்கலைக்கழகங்களில் எமது பல்கலைக்கழகமும் ஒன்றாகும்.

6.23.1 செயற்படுத்தும் பொறிமுறை

பல்கலைக்கழகம் இணையவழி விரிவுரைகளை நடாத்துவதற்கு முதலில் Google Classroom, Zoom, MS-TEAMS, Moodle, e-mail, WhatsApp போன்ற பல்வேறு தளங்களையும் பின்னர் LMS (Moodle) மற்றும் ZOOM தளங்களை பயன்படுத்தியது.

6.23.2 இணையவழி விரிவுரைகளை நடாத்தும் தளம்

தரவுத்தளத்தால் இயக்கப்படும் இணையவழி விரிவுரைத் தளம் மார்ச் மாத இறுதியில் அறிமுகப்படுத்தப்பட்டன. இது பல்கலைக்கழக இணையதளத்தை அணுகுவதன் மூலம் இணையவழி வழங்கப்படும் பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய அண்மைத் தகவல்களை வழங்குகிறது. மேலும் இத்தளத்தில் பணியாளரின் தொழிற்பாட்டு நேரத்தையும் பணியாளர் எங்கு இருக்கிறார் என்பதையும் காட்டும் பொறிமுறை ஒன்று காணப்படுகிறது. இத்தளத்தின் உதவியுடன் பல்கலைக்கழகமானது பணியாளர் எங்கு இருக்கிறார் என்பதை அறிந்து அவசர உதவிகள் ஏதும் தேவைப்படின் அவரை நாட முடியும். இது இத்தளத்தின் சிறப்பம்சமாகும். இத்தளத்தினூடாக மாணவர்கள் தமது விரிவுரை நேரம்

பற்றியும் அமைச்சின் அதிகாரிகள் இணையவழி விரிவுரைகள் குறித்த அண்மைத் தகவல்களையும் பெறலாம்.

7.23.3 இணையவழிக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட உதவிகளும் சலுகைகளும்

LMS (Moodle) http://lms.univotec.ac.lk மூலம் இணையவழி பாடத்தாள்கள் மாணவர்களுக்குக் கிடைக்கப்பெற்றது. விரிவுரைகளை நடத்த ZOOM தளம் பயன்படுத்தப்படுகிறது. இலங்கை கல்வி மற்றும் ஆராய்ச்சி வலையமைப்பு (LEARN) இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறையுடன் (TRCSL) இணைந்து பல்கலைக்கழக LMSஇனை இலவசமாகப் பயன்படுத்தும் அனுமதியை வழங்கியது. இதன்மூலம் பல்கலைக்கழகத்தின் கல்விசார் ஊழியர்களும் மாணவர்களும் ZOOM தளத்தை இலவசமாகப் பயன்படுத்தும் வாய்ப்புக் கிட்டியது.

பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்களும் வருகைதரு விரிவுரையாளர்களும் வீடுகளிலிருந்தவாறே விரிவுரைகளை வழங்குவதற்கான அனுமதி வழங்கப்பட்டது. ஊரடங்கு விதிக்கப்பட்டிருந்த காலங்களில் பல்கலைக்கழகத்துக்குச் சமூகமளிக்கமுடியாதிருந்தபோதிலும் பல்கலைக்கழகம் இணையவழி கற்றல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குத் தேவையான கருவிகளை வழங்கியது. இதன்படி இணையவழி செயற்பாடுகள் பெரியளவிலான தடங்கல்கள் ஏதுமின்றி நீண்டகாலமாக முன்னெடுக்கப்பட்டுவருகிறது.

6.23.4 இணையவழி விரிவுரைகளின் நிலைமை

2020 மே நடுப்பகுதியில் ஊரடங்கு தளர்த்தப்பட்டதும் பணியாளர்கள் வேலை முறையேட்டின் அடிப்படையில் பணிக்குத் திரும்ப முடிந்தது. கல்விசார் ஊழியர்களுக்கும் மாணவர்களுக்கும் இலவச இணையம் வழங்கப்படுவதால் பல்கலைக்கழகத்தால் LEARN உதவியுடனான ZOOM வசதியுடன் இணையவழி விரிவுரைகளை வலுப்படுத்த முடிந்தது. உயர்கல்வி அமைச்சின் பரிந்துரையுடன் பல்கலைக்கழகம் இறுதியாண்டு மாணவர்களுக்கான பரீட்சைகளை 2020 ஜூலை 11 முதல் இறுக்கமான சுகாதார வழிகாட்டுதல்களுக்கமைவாக நடாத்தியது. மேலும், பரீட்சைகளுக்கு முன்னுரிமை அளித்து அரசின் பரிந்துரைகளின்படி பாதுகாப்பு விதிமுறைகளுக்கு இணங்க பல்கலைக்கழகத்தை மீண்டும் திறக்க முயற்சிகளையும் பல்கலைக்கழகம் முன்னெடுக்கிறது.

6.23.5 இணையவழி விரிவுரைகளின் வெற்றி விகிதம்

இணைய வசதி, கணினிகள் மற்றும் ஸ்மார்ட் கைபேசிகள் போன்ற சாதனங்களின் கிடைப்பனவு மற்றும் பொருளாதார நெருக்கடிகள் போன்ற சில சிக்கல்கள் இருந்தன. சரியான நேரத்தில் பாடக் குறிப்புகளைப் பெற்றுக்கொள்ள முடியாத மாணவர்களுக்கு சலுகை வழங்கும் பொருட்டு இணையவழி ஒப்படைகளை உரிய தேதிகளில் சமர்ப்பிக்குமாறு நெருக்கடி வழங்கப்படவில்லை. ZOOM விரிவுரைகளின் பதிவுகள் சேமிக்கப்பட்டு மாணவர்கள் தம்மிடையே பகிர்ந்துகொள்வதற்கு வசதியாக YouTube தளத்தில் பதிவேற்றப்பட்டது.

இணையவழிக் கற்கைகளைப் பயன்படுத்திக்கொள்வதற்குத் தொழில்நுட்பச் சிக்கல்கள் தடையாக உள்ளன. கற்றல் கற்பித்தல் மேம்படுத்துவதற்கு அர்த்தமுள்ள வகையில் புதிய தொழில்நுட்பத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பான அறிவில் போதாமை காணப்பட்டது. தொழில்நுட்பச் சிக்கல்களைச் சரிசெய்ய ஆசிரியர்கள் எப்போதும் சிறிது நேரம் ஒதுக்க வேண்டியிருப்பதோடு உள்ளடக்கத்தைத் திருத்துவதும் சிக்கலான பணியாகவும் நேரத்தை விழுங்கும் பணியாகவும் மாறிப் போகலாம். மேற்கூறிய சவால்களுக்கு மத்தியிலும் இணையவழி விரிவுரைகளிலும் மற்றும் ஒட்டுமொத்த மாணவர் பங்கேற்பிலும் 60%இற்கும் அதிகமான வெற்றி வீதத்தை பல்கலைக்கழகம் அவதானித்துள்ளது.

6.23.6 கொவிட் 19 ஊடாக ஏற்பட்ட புதிய வாய்ப்புகளும் இணையவழி விரிவுரைகளை நடாத்துவதிலுள்ள சவால்களும்

இணையவழி வகுப்புகளுக்கு மாறுவதற்கு முன்பு பல்கலைக்கழகம் LMS ஐப் பயன்படுத்தி கலப்பு கற்றல் போன்ற கற்பித்தல் முறை ஒன்றை பின்பற்றியது. இணையவழி வகுப்புகளே இப்போதுள்ள ஒரே வழி என்பதால் ஆசிரியர்கள் தொடர்ந்து கற்பிக்க வேண்டிய நிலை காணப்படுகிறது. இது பழைய கற்பித்தல் அமைப்பில் குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தாலும் இணையவழி வகுப்புகளில் ஆசிரியர்கள் காட்டும் உற்சாகமும் மாணவர்களின் ஈடுபாடும் நம்பிக்கை தருவதாக அமைந்துள்ளது.

இணைய வகுப்புகள் பல்கலைக்கழகக் கல்வியை மிகவும் நெகிழ்வுத்தன்மை மிக்கதாக மாற்றியுள்ளதால் உயர் கல்வி அனைத்தையும் உள்ளடக்கும் தன்மை கொண்டதாகப் பரிணமித்துள்ளது. பல மாணவர்கள், குறிப்பாக வயது வந்த மாணவர்கள் அல்லது பணிபுரியும் மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்கு அவர்களின் நேரங்களையும் பாடத் தேர்வுகளையும் தமக்கேற்ற வகையில் அமைத்துக்கொள்ளும் நெகிழ்வுத்தன்மை தேவைப்படுகிறது. காலங் காலமாகப் புறக்கணிக்கப்பட்டு வரும் சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் இணைய வகுப்புகள் வாய்ப்புகளை வழங்குகின்றன.

இணைய வகுப்புகள் புதிய தொழில்நுட்பங்களை லாவகமாகக் கையாளும் புதிய தலைமுறை மாணவர்களையும் அதிகம் ஈர்க்கின்றன. டிஜிற்றல் முறையில் வழங்கப்பட்ட தகவல்களை இவர்கள் அதிக அளவில் உள்வாங்கிக்கொள்கிறார்கள். கூட்டுக் கற்றலை ஊக்குவிப்பதற்கு இணைய வகுப்புகள் உதவிகரமாக இருப்பதாகவும் குறிப்பாக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையேயான நேரடியற்ற தொடர்பு மாணவர்களைக் கற்றலில் ஈடுபாடுகொள்ள உதவுவதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன. இந்த இரண்டு நுட்பங்களும் கற்றல் கொள்கைகளுடன் வலுவாக இணைக்கப்பட்டுள்ளன.

பல விரிவுரை மண்டபம் சார்ந்த பாடங்கள் இணையவழியில் நடாத்தப்படுவதாலும் செய்முறை அமர்வுகள் மற்றும் களப்பயணங்கள் மட்டுமே மேற்பார்வையின்கீழ் நடத்தப்படுவதாலும் உயர்கல்விக்கான செலவு வெகுவாகக் குறைக்கப்படும். எனவே, மாணவர்கள் தங்கள் வீடுகளின் இருந்துகொண்டே பாதுகாப்பாகவும் வசதியாகவும் படிக்க முடியும், இதன்மூலம் போக்குவரத்து, தங்குமிடம் என்பவற்றுக்கான செலவுகள் வெகுவாகக் குறையும்.

6.23.7 முகங்கொடுக்கும் சவால்கள்

இணைய வகுப்புகள் கட்டாயமாக்கப்படுவது பல்கலைக்கழகங்களில் மாணவர்களை இணைத்துக் கொள்ளும் விகிதத்தைக் குறைத்துவிடுமோ என்ற அச்சம் எழுகிறது. வகுப்பறைக் கற்பித்தலுடன் ஒப்பிடுகையில் இணைய வகுப்புகள் நிறைவைத் தரவில்லை என்கின்றன ஆய்வுகள். மேலும், இவ்விரண்டு கற்பித்தல் முறைகளையும் உள்ளடக்கிய கலப்புக் கற்றல் முறை பற்றிய ஆதாரங்களும் அவ்வளவாக இல்லை. இன்னும், தொலைநிலைக் கல்வியைத் தவிர வேறு எந்த மாற்றுவழிகளும் இல்லாத இவவாறானவொரு கொவிட் சூழலில் கல்விச் சமூகம் எப்படி இதனை எதிர்கொள்ளும் என்பதனை அவ்வளவு விரைவில் கணித்துவிட முடியாது.

இணையவழி வகுப்புகளை நடாத்துவதற்குத் தொழில்நுட்பச் சிக்கல்கள் பெரும் தடையாக உள்ளன. இதனால் மாணவர்களும் ஆசிரியர்களும் விரக்தியடைந்துள்ளனர், மேலும் இச்சிரமங்கள் மாணவர்கள் கல்வியில் ஈடுபடுமாற்றை குறைக்க வழிவகுக்கும். தொழில்நுட்பக் கோளாறுகளைச் சரிசெய்வதற்கே பயிற்றுநர்களுக்கு நேரம் போதுமானதாக இருக்கிறது. மட்டுமல்லாமல், பாட உள்ளடக்கத்தைத் திருத்துவது ஒரு சிக்கலானதும் கடினமானதுமான பணியாக மாறும்.

இணையவழிப் பாடங்கள் சில மாணவர்களுக்குக் கிடைக்கலாம் சில மாணவர்களுக்குக் கிடைக்காமலும் போகலாம். கலப்பு அல்லது இணையவழிக் கற்றலுக்கு மாணவர்களின் வேண்டா வெறுப்புடன் அல்லாமல் தாமாக உணர்ந்து ஈடுபாட்டுடன் கற்கும் பொறுப்புணர்வு தேவை. இருப்பினும், சில மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு இது சவாலாக இருக்கலாம். இந்த மாணவர்கள் வெற்றிபெறுவதற்கு அதிக ஊக்கமும் அமைப்பாக்கமும் ஒழுக்கமும் தேவை.

இறுதியாக, முழுநேர இணையவழிக் கல்வி பல மாணவர்களுக்கு எட்டாக்கனியாகக்கூட இருக்கலாம். இணைய வசதி, மடிக்கணினி அல்லது ஸ்மாட் கைபேசிகள் போன்ற மின்னணு சாதனங்களும் பொருத்தமான கற்றல் சூழலும் எல்லா மாணவர்களுக்கும் கிடைத்துவிடாது. ஆன்லைன் கற்பித்தலுக்கு அவசரமாக மாறுவது, கொவிட் காரணமாக பெற்றோர் தொழிலில் ஈடுபடமுடியாமை போன்ற பிற காரணங்களால் ஏற்படக்கூடிய குடும்பப் பிரச்சனைகளுக்கு மத்தியில் இணையக் கல்விக்கான இத்துரித மாற்றம் மாணவர்களின் மன அழுத்தத்தை மேலும் கூட்டலாம்.

7 தகவற் தொடர்பாடற் தொழில்நுட்பப் பீடம்

7.1 அறிமுகம்

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பீடம் 2019 டிசம்பரில் நிறுவப்பட்டதோடு 2021 ஜனவரியில் பீடாதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டு பீடங்களின் செயற்பாடுகள் முறைப்படுத்தப்பட்டுள்ளன.

1. மென்பொருட் தொழில்நுட்பத் துறை
2. வலையமைப்புத் தொழில்நுட்பத் துறை
3. பல்லூடகம் மற்றும் இணையத்தளத் தொழில்நுட்பத் துறை
4. பல்துறைக் கற்கைகள் துறை

பீடத்தால் வழங்கப்படும் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களாவன:

#	பட்டம்	வழங்கப்படும் முறை
1	மென்பொருட் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	வார நாள் (B1) மற்றும் வார இறுதி (B2) நிகழ்ச்சித்திட்டம்
2	வலையமைப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	வார நாள் (B1) மற்றும் வார இறுதி (B2) நிகழ்ச்சித்திட்டம்
3	பல்லூடகம் மற்றும் இணையத்தளத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	வார நாள் (B1) மற்றும் வார இறுதி (B2) நிகழ்ச்சித்திட்டம்

7.2 மாணவர் சேர்ப்பு – 2020/2021ஆம் கல்வியாண்டு

பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களைத் தெரிவுசெய்வதற்கான உளச்சார்புப் பரீட்சை 2020ஆம் ஆண்டு பெப்ரவரி 16ஆம் திகதி நடாத்தப்பட்டது. வாரநாள் மற்றும் வார இறுதி நாள் பிரிவுகளுக்கு விண்ணப்பித்த NVQ பரீட்சார்த்திகளுக்கான உளச்சார்புப் பரீட்சை நடாத்தப்பட்டது. உளச்சார்புப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர்கள் 2020/2021ஆம் கல்வியாண்டுக்கு அனுமதிக்கப்பட்டனர்.

கொவிட் -19 தொற்றுநோய்ப் பரவலையடுத்து அரசின் விதிமுறைகளின்படி மாணவர் சேர்க்கை மற்றும் பதிவுச் செயன்முறை என்பவற்றில் தாமதம் ஏற்பட்டது. மாணவர் சேர்க்கை 2020 செப்ரெம்பர் மாதம் தொடங்கப்பட்டபோதும் நாட்டு நிலைமை காரணமாக மீண்டும் பிற்போடப்பட்டது. ஆயினும் மாணவர் சேர்க்கை மற்றும் பதிவு என்பன 2021 மார்ச் மாதமளவில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேசிய தொழிற்கல்வி தகுதியில் (NVQ) 5/6ஆம் மட்டத்தைக் கொண்டுள்ள மாணவர்கள் வார இறுதி பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் மாணவர் கொள்ளளவைப் பொறுத்து உளச்சார்புப் பரீட்சை மதிப்பெண்களின் அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படும் அதேவேளை வார நாள் நிகழ்ச்சித்திட்டங்கள் எனின் உளச்சார்புப் பரீட்சைப் பெறுபேறுகளைப் பொருட்படுத்தாது (NVQ) 5/6ஆம் மட்டத்தைக் கொண்டுள்ள மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. NVQ மாணவர்களுக்கு வாய்ப்பளித்த பிறகு, மீதமுள்ள வெற்றிடங்களுக்கு க.பொ.த உ/த Z மதிப்பெண் அடிப்படையில் க.பொ.த உ/த (தொழில்நுட்ப் பிரிவினருக்கு முன்னுரிமை) மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
மாணவர் சேர்க்கை விவரங்கள் அட்டவணை 9.1 மற்றும் 9.2 இல் வழங்கப்பட்டுள்ளன. எந்தெந்தப் பட்டங்களுக்கு எந்தெந்த க.பொ.த உ/த பாடப் பிரிவுகள் நுழைவுத் தகுதிகளாகக் கருதப்படும் என்ற விவரங்களும் அவ்வகையில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையும் அட்டவணை 9.3 இல் வழங்கப்பட்டுள்ளன. NVQ மற்றும் க.பொ.த உ/த அடிப்படையில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை அட்டவணை 9.4 இல் வழங்கப்பட்டுள்ளது.

2020/2021ஆம் கல்வியாண்டில் மொத்தமாக 241 மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டனர்

அட்டவணை 7.1: மாணவர் சேர்ப்பு – தகவற் தொடற்பாடற் தொழில்நுட்பப் பீடம் - 2020/2021ஆம் கல்வியாண்டுக்கான வார நாள் நிகழ்ச்சித்திட்டம்

#	இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டம்	பதிவுசெய்த மாணவர்களின் எண்ணிக்கை
1	மென்பொருட் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	40
2	வலையமைப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	40
3	பல்லூடகம் மற்றும் இணையத்தளத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	40
தகவற் தொடர்பாடற் தொழில்நுட்பப் பீடத்தின் வார நாள் நிகழ்ச்சித்திட்டத்தில் பதிவுசெய்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கை		120

அட்டவணை 7.2: மாணவர் சேர்ப்பு – தகவற் தொடற்பாடற் தொழில்நுட்பப் பீடம் - 2020/2021ஆம் கல்வியாண்டுக்கான வார இறுதி நிகழ்ச்சித்திட்டம்

#	இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டம்	பதிவுசெய்த மாணவர்களின் எண்ணிக்கை
1	மென்பொருட் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	40
2	வலையமைப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	44
3	பல்லூடகம் மற்றும் இணையத்தளத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	40
தகவற் தொடர்பாடற் தொழில்நுட்பப் பீடத்தின் வார இறுதி நிகழ்ச்சித்திட்டத்தில் பதிவுசெய்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கை		**124**

அட்டவணை 7.3: க.பொ.த உ/த நுழைவுத் தகுதியாகக் கருதப்படும் பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

#	இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டம்	கருத்திற் கொள்ளப்பட்ட க.பொ.த உ/த பிரிவு
8	மென்பொருட் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	த.தொ.தொழில்நுட்பத்தை ஒரு பாடமாகக் கொண்ட எந்தவொரு க.பொ.த உ/த பிரிவும்
9	வலையமைப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	
10	பல்லூடகம் மற்றும் இணையத்தளத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	

அட்டவணை 7.4: 2020/2021ஆம் கல்வியாண்டுக்கான வெவ்வேறு பட்டங்களுக்காகத் இணைத்துக் கொள்ளப்பட்ட NVQ, க.பொ.த உ/த மாணவர்களின் எண்ணிக்கை

#	இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டம்	NVQ	க.பொ.த உ/த
வாரநாள்			
1	மென்பொருட் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	17	23
2	வலையமைப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	05	35
3	பல்லூடகம் மற்றும் இணையத்தளத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	17	23
வார இறுதி			
1	மென்பொருட் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	40	--
2	வலையமைப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	44	--
3	பல்லூடகம் மற்றும் இணையத்தளத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	40	--

7.3 2020/2021ஆம் ஆண்டுக்கான மாணவர் சேர்ப்பு அங்குரார்ப்பண நிகழ்வு

2020/2021ஆம் கல்வியாண்டுக்கான தொடக்க விழா 2021 மார்ச் 09 அன்று ZOOM தளம் மூலம் நடத்தப்பட்டதோடு எல்லோரையும் சென்றடையும் விதமாக யூடியூப் மற்றும் பேஸ்புக் சமூக ஊடகங்கள்வழி இந்த நிகழ்வு நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. வார நாள் அணியினருக்கான ஆற்றுப்படுத்தல் நிகழ்வுகளை 2021ஆம் ஆண்டு மார்ச் 15, 16, 17ஆம் திகதிகளிலும் வார இறுதி அணியனரக்கான ஆற்றுப்படுத்தல் நிகழ்வுகளை 20 மற்றும் 21 ஆம் திகதிகளிலும் நடாத்தத் திட்டமிடப்பட்டது. ZOOM தளத்தைப் பயன்படுத்தி இணையவழியிலேயே ஆற்றுப்படுத்தல் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

வார நாள் மாணவர்களுக்கான அடிப்படைக் கற்கைத்திட்டம் (04 வாரங்கள்) நடத்தப்பட்டதோடு முதலாவது அரையாண்டை 15 வாரங்களில் முடிக்கத் திட்டமிடப்பட்டது. ஆற்றுப்படுத்தல் நிகழ்ச்சிக்குப் பிறகு வார இறுதி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடங்கப்பட்டு 22 வாரங்களுக்கு நடத்தத் திட்டமிடப்பட்டது. பீடங்களால் வழங்கப்படும் தொழில்நுட்ப இளமாணிப் பட்ட மாணவர்களின் தொகை அட்டவணை 7.5 இல் வழங்கப்பட்டுள்ளது.

அட்டவணை 7.5 மொத்த மாணவர் தொகை

பட்ட நிகழ்ச்சித்திட்டம்	பதிவுசெய்த ஆண்டு									
	2016		2017		2018		2019		2020	
	வாரநாள்	வார இறுதி	வாரநாள்	வார இறுதி	வாரநாள்	வார இறுதி	வாரநாள்	வார இறுதி	வாரநாள்	வார இறுதி
வலையமைப்புத் தொழில்நுட்பம்	32	31	33	41	41	43	29	37	40	44
பல்லூடகம் மற்றும் இணையத்தளத் தொழில்நுட்பம்	26	34	37	36	39	37	35	38	40	40
மென்பொருட் தொழில்நுட்பம்	32	27	39	40	33	40	31	32	40	40
மொத்தம்	**90**	**92**	**109**	**117**	**113**	**110**	**95**	**107**	**120**	**121**

7.4 2020ஆம் ஆண்டு பீடத்தில் நடாத்தப்பட்ட பரீட்சைகள்

2020ஆம் ஆண்டு வார நாள், வார இறுதி அணிகளுக்கு பீடத்தில் நடாத்தப்பட்ட பரீட்சைகளின் விவரம் அட்டவணை 7.6இல் வழங்கப்பட்டுள்ளது.

அட்டவணை 7.6: 2020ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட பரீட்சைகள்

#	தொழில்நுட்ப இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டம்	முதலில் பதிவு செய்த ஆண்டு	நடாத்தப்படும் முறை	அரையாண்டிறுதிப் பரீட்சை
1	மென்பொருட் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி வலையமைப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி பல்லூடகம் மற்றும் இணையத்தளத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	2016	வார இறுதி	6ஆம் அரையாண்டு
2	மென்பொருட் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி வலையமைப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி பல்லூடகம் மற்றும் இணையத்தளத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	2017	வாரநாள்	5ஆம் அரையாண்டு
3	மென்பொருட் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி வலையமைப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி பல்லூடகம் மற்றும் இணையத்தளத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	2017	வார இறுதி	4ஆம் அரையாண்டு
4	மென்பொருட் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி வலையமைப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	2018	வாரநாள்	3ஆம் அரையாண்டு

	பல்லூடகம் மற்றும் இணையத்தளத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி			
5	மென்பொருட் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	2018	வார இறுதி	3ஆம் அரையாண்டு
	வலையமைப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி			
	பல்லூடகம் மற்றும் இணையத்தளத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி			
6	மென்பொருட் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	2019	வாரநாள்	1ஆம் அரையாண்டு
	வலையமைப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி			
	பல்லூடகம் மற்றும் இணையத்தளத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி			
7	மென்பொருட் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	2019	வார இறுதி	1ஆம் அரையாண்டு
	வலையமைப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி			
	பல்லூடகம் மற்றும் இணையத்தளத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி			

7.5 2020ஆம் ஆண்டுக்கான வருகைதரு விரிவுரையாளர்கள்

பின்வரும் காரணங்களுக்காக பீடம் வருகைதரு விரிவுரையாளர்களின் சேவையைப் பெற்றுக்கொள்கிறது

- நிரந்தரக் கல்விசார் பணியாளர் பற்றாக்குறை
- தொழிற்றுறையுடனும் ஏனைய பல்கலைக்கழகங்களினதும் கல்வி நிறுவனங்களினதும் கல்விசார் பணியாளர்களுடனும் நட்புறவுகளை உருவாக்குதல்

அனைத்துப் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்காகவும் பல்கலைக்கழகத்தால் நியமிக்கப்பட்ட வருகைதரு விரிவுரையாளர்களின் விவரம் அட்டவணை 9.7இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 7.7: 2020ஆம் ஆண்டின் வருகைதரு விரிவுரையாளர்கள் பற்றிய விபரம்

#	தொழில்நுட்ப இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டம்	முதலில் பதிவு செய்த ஆண்டு	நடாத்தப்படும் முறை	அரையாண்டு	வருகைதரு விரிவுரையாளர் எண்ணிக்கை
01	மென்பொருட் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	2017/2018	B2	05	-
		2018/2019	B2	04	14
		2017/2018	B1	06	4
		2018/2019	B1	04	11
02	வலையமைப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	2017/2018	B2	05	-
		2018/2019	B2	04	14
		2017/2018	B1	06	5
		2018/2019	B1	04	12
03	பல்லூடகம் மற்றும் இணையத்தளத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	2017/2018	B2	05	-
		2018/2019	B2	04	14
		2017/2018	B1	06	6
		2018/2019	B1	04	12
04	மென்பொருட் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி வலையமைப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி பல்லூடகம் மற்றும் இணையத்தளத் தொழில்நுட்பத்தில்	2019/2020	B1	02	4
		2019/2020	B2	02	4

7.6 தொழில்நுட்ப இளமாணிப் பட்ட மாணவர்களுக்கு வழங்கப்பட்ட விலக்களிப்புகள்

கல்விச் சபையால் ஒப்புதலளிக்கப்பட்ட விலக்களிப்புக் கொள்கையின் அடிப்படையில் மாணவர்களுக்கு விலக்களிக்கப்பட்டது. மாணவர்கள் NVQ 6 டிப்ளோமா அல்லது அதற்கு சமமான அல்லது உயர் தகுதி பெற்றிருந்தால் மட்டுமே விலக்குகளுக்கு தகுதியுடையவர்களாகக் கருதப்பட்டனர். மாணவர் டிப்ளோமா மட்டத்தில் சமமான பாடத்தை வெற்றிகரமாக முடித்திருந்தால் பாட அலகுகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. இதற்குச் சான்றாக மாணவர்கள் டிப்ளமோ கற்கைநெறியின் மூலப் பெறுபேற்று அறிக்கையை வழங்க வேண்டியிருந்தது.

விலக்குக் கோரும் மாணவர்கள் இரண்டு பிரிவுகளின் கீழ் விண்ணப்பிக்க வேண்டியிருந்தது. முதலாம் வகுதி மாணவர்களுக்கு விரிவுரைகள், செய்முறை வகுப்புகள், அரையாண்டிறுதிப் பரீட்சை உட்பட அனைத்து மதிப்பீடுகளிலும் இருந்து விலக்களிக்கப்பட்டது. எனினும் GPA ஐ கணக்கிடும் பொருட்டு குறிப்பிட்ட பாட அலகில் அவர்களது செயற்றிறன் சாதாரண தேர்ச்சிக்குச் சமமாக கருதப்பட்டது. இரண்டாம் வகுதி மாணவர்களுக்கு விரிவுரைகள், செய்முறை வகுப்புகளில் கலந்து கொள்வதில் இருந்து விலக்களிக்கப்பட்டபோதும் அவர்கள் தொடர் மதிப்பீட்டுப் பரீட்சைகளை முடித்து, அரையாண்டிறுதிப் பரீட்சைகளுக்குத் தோற்ற வேண்டியிருந்தது. இதன்படி, அம்மதிப்பீடுகளில் மாணவர்கள் பெற்ற பெறுபேறுகள் அவர்களின் GPA இல் கணக்கிடப்பட்டன.

மேலும், முழு அரையாண்டுகளுக்கும் விலக்குக் கோரி விண்ணப்பித்துத் தகுதி பெற்ற மாணவர்களுக்கு விலக்களிப்புக் கொள்கையின்படி அரையாண்டு விலக்களிப்பு வழங்கப்பட்டது. முதலாம் ஆண்டு முழுவதும் விலக்கு அளிக்கப்பட்டவர்கள் இரண்டாம் ஆண்டு முதல் பட்டப்படிப்பில் இணைந்துகொள்ள வாய்ப்பளிக்கப்பட்டது. முதல் அரையாண்டு முழுவதும் விலக்களிக்கப்பட்டவர்களுக்கு இரண்டாம் அரையாண்டிலிருந்து பட்டப்படிப்பில் இணைந்துகொள்ள வாய்ப்பளிக்கப்பட்டது. ஏனைய மாணவர்களுக்கு அவர்களின் கோரிக்கைகளின்படி விலக்களிப்புக் கொள்கையின் அடிப்படையில் பாட அலகிலிருந்தான விலக்களிப்புகள் வழங்கப்பட்டன.

7.7 தொழில் அடிப்படையிலான தொழிற்றுறைப் பயிற்சி

தொழில் அடிப்படையிலான தொழிற்துறைப் பயிற்சி என்பது தொழில்நுட்ப இளமாணி நிகழ்ச்சித்திட்டங்களில் முக்கியமானதும் கட்டாயமானதுமான ஓர் அங்கமாகும். ஐந்தாம் அரையாண்டில் வழங்கப்படும் இப்பயிற்சி ஆறு மாதங்களுக்கு நடைபெறும். மாணவர்கள் தேசிய தொழில்பயிலுநர் மற்றும் தொழிற்துறை பயிற்சி அதிகாரசபையுடன் இணைந்து தொழிற்றுறைகளில் அமர்த்தப்படுகிறார்கள். மாணவர்களின் தரப் புள்ளிச் சராசரி (GPA) கணிப்பில் இக்கூறு கருத்திற்கொள்ளப்படுவதால் மாணவர்களின் தொழில் அடிப்படையிலான தொழிற்துறை பயிற்சியை மதிப்பிடுவதற்கு விரிவான மதிப்பீட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டது.

7.8 பீடச் சபைக் கூட்டங்கள்

பீடக் குழுவின் கூட்டங்கள் ஒவ்வொரு மாதமும் நடத்தப்பட்டன. 2020ஆம் ஆண்டில் மொத்தம் 07 கூட்டங்கள் நடத்தப்பட்டன. கொவிட் - 19 தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக பீடக் குழுவின் எண்ணிக்கை வழமையான எண்ணிக்கையை விடக் குறைவாக இருந்தது.

7.9 பங்குபற்றிய போட்டிகளும் பொருட்காட்சிகளும்

கொவிட் - 19 தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக வழமையான பொருட் காட்சிகளும் போட்டிகளும் நடைபெறவில்லை

7.10 பொதுப் பட்டமளிப்பு விழா

பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவினை ஆண்டின் இறுதியில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தபோதும், கொவிட்-19 சூழ்நிலை காரணமாக அது நடைபெறவில்லை. ஆனால் பட்டத்தை வழங்க திட்டமிடப்பட்ட கல்வி ஆண்டுக்கான பரீட்சை முடிவுகள் இறுதி செய்யப்பட்டன.

8 தொடர் கல்வி மையம் (CEC)

தொடர் கல்வி மையமானது இப்பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டதிலிருந்து டிப்ளோமா, சான்றிதழ், குறுங் கற்கைநெறிகள், தொடர்ச்சியான தொழில்விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பிற விரிவாக்க நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து நடத்தி வருகிறது. பாராளுமன்றச் சட்டத்திற்கு அமைவாக பல்கலைக்கழக கிளையே இலங்கை தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தின் செயற்பாடுகளைத் தொடர்கிறது.

குறுகிய கால தொழில்வாண்மை விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில், பயிற்சியாளர்களின் பயிற்சி (TOT) மதிப்பீட்டாளர்களின் பயிற்சி (TOA) ஆகிய நிகழ்ச்சித்திட்டங்கள் துறையில் நிலவும் அவற்றுக்கான கேள்வி, அவசியம் என்பவற்றின் அடிப்படையில் நடத்தப்படுகின்றன. இவை தொழிற்துறை ஊழியர்களினதும் தொழில்சார் கல்வி, பயிற்சித் துறையின் கற்பித்தல் துறைசார்ந்தவர்களதும் தொழில்வாண்மை விருத்திக்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் குறுகிய காலத்தைக் கொண்டவையாக இருந்தாலும், இவை உண்மையான தொழிற்சூழலை அனுபவிப்பதற்கான வாய்ப்புகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டவை.

எதிர்பாராத கொவிட் 19 பரவல், தனிமைப்படுத்தல், சமூக இடைவெளி என்பன காரணமாக தொடர் கல்வி மையத்தால் அது விரும்பிய முன்னேற்றத்தை அடைய முடியவில்லை. பல்கலைக்கழகம் அவ்வப்போது மூடப்பட்டது. பல்கலைக்கழகத்துக்குச் செல்வோர் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்பட்டது. மேற்கூறிய சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் தொடர் கல்வி மையத்தால் பின்வரும் முடிவுகளை அடைய முடிந்தது.

8.1 உயர் தேசிய மற்றும் தேசிய டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் 2020

அட்டவணை 8.1: உயர் தேசிய மற்றும் தேசிய டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்

டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	**NVQ மட்டம்**	**பதிவுசெய்த மாணவர் எண்ணிக்கை**
பயிற்சி நிலைய முகாமைத்துவத்தில் உயர் தேசிய டிப்ளோமா	மட்டம் 6	30
தொழில்நுட்ப ஆசிரியர் கல்வியில் தேசிய டிப்ளோமா	மட்டம் 5	105

8.2 குறுங்கால நிகழ்ச்சித்திட்டம்

8.2.1 மதிப்பீட்டாளர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் (TOA)

அட்டவணை 10.2: மதிப்பீட்டாளர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் - 2020

	சான்றிதழ்	**காலம்**	**பங்குபற்றியோர் எண்ணிக்கை**
01	ToA 116	20/01/2020-24/01/2020	21
02	ToA 117	05/10/2020-09/10/2020	35
	மொத்தம்		**56**

8.2.2 தொழில்சார் கல்வி, பயிற்சித் துறையிலுள்ள தகுதிவாய்ந்த தலைவர்கள்

அட்டவணை 10.3: தொழில்சார் கல்வி, பயிற்சித் துறையிலுள்ள தகுதிவாய்ந்த தலைவர்கள்

	சான்றிதழ்	**காலம்**	**பங்குபற்றியோர் எண்ணிக்கை**
01	தகுதிவாய்ந்த தலைவர்	2020 ஜனவரி 30 தொடக்கம் 31	31
02	தகுதிவாய்ந்த தலைவர்	2020 பெப்ரவரி 25 தொடக்கம் 26	26
03	தகுதிவாய்ந்த தலைவர்	2020 ஓகஸ்ட் 27 தொடக்கம் 28	19
	மொத்தம்		76

தொடர் கல்வி மையத்தின் செயற்பாடு 2021 ஜனவரி முதல் பணியாளர் மேம்பாட்டு மையம் என்ற பெயரில் புதிதாக நிறுவப்பட்ட பிரிவின்கீழ் வருகிறது.

9 அனுமதி, அங்கீகாரம் மற்றும் தர உத்தரவாதப் பிரிவு (AAQA)

9.1 அறிமுகம்

AAQA பிரிவானது 2014ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நிறுவப்பட்டது. குறித்த பிரிவு அதன் முதல் ஆண்டில், துணைச் சட்டங்கள், ஒழுங்குமுறைகள், விதிமுறைகள், நடைமுறைகள் முதலான தற்போதுள்ள தேவையான ஆவணங்களை மேம்படுத்துவதிலும் திருத்துவதிலும் கவனம் செலுத்தியதோடு அதன் இரண்டாவது ஆண்டில் பல்கலைக்கழகத்துக்கு உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல், அங்கீகார செயல்முறைகள், தர உத்தரவாத நடவடிக்கைகளைத் தொடங்குதல் முதலான விடயங்களில் படிப்படியாகக் கவனம் செலுத்தியது.

9.2 சுருக்கமான தர உத்தரவாதக் கட்டமைப்பு

வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் ஒரு தர உத்தரவாதக் கட்டமைப்பை கொண்டுள்ளது.

அக்கட்டமைப்பின் அம்சங்களும் செயற்பாடுகளும் பின்வரும் விடயங்களில் பல்கலைக்கழகத்தின் தரத்தை உறுதிப்படுத்துகின்றன:

I. பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றிற்கான சட்டத் தேவைகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் தரத்தில் காணப்படல்
II. பௌதிக வளங்களின் தரம்
III. பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் தரம்
IV. பல்கலைக்கழக ஆசிரியர்களின் தகுதிகளும் தகைமைகளும்
V. ஆய்வு நடவடிக்கைகள்
VI. கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்கும் முறை
VII. மதிப்பீட்டு நடைமுறைகள்
VIII. மாணவர் நலன்புரி

2008ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகமானது அதன் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் குறிப்பிட்டிருப்பது போல ஓர் பட்டம் வழங்கும் நிறுவனமாக அனைத்துச் சட்டத் தேவைப்பாடுகளையும் கொண்டுள்ளது.

2008ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட இப்பல்கலைக்கழகமானது இலங்கையில் காணப்படும் ஏனைய தேசிய பல்கலைக்கழகங்களைப் போலவே சட்டம், கல்விசார் அந்தஸ்தைக் கொண்டுள்ளது. பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சால் வெளியிடப்பட்டதும் 1992.03.13ஆம் திகதியிடப்பட்டதுமான 16/92ஆம் இலக்கப் பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 6, 7ஆம் பிரிவுகளின்படி, வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் பட்டங்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின்கீழ் காணப்படும் பல்கலைக்கழகங்களாலும் பொதுநலவாயப் பல்கலைக்கழகங்களின் சங்கங்களின் பட்டியலில் மற்றும் / அல்லது சர்வதேச பல்கலைக்கழகக் கையேட்டில் பட்டியலிடப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களாலும் வழங்கப்படும் பட்டங்களுக்குச் சமமானதாகும்.

ஒரு நிர்வாகக் கட்டடத் தொகுதி, விரிவுரை மண்டபங்கள், நூலகம், ஆய்வுகூடங்கள், கலையரங்கம், சிற்றுண்டிச் சாலை, விடுதிகள் முதலான தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் நிறுவப்பட்டுள்ளதோடு பல்கலைக்கழக வளர்ச்சியின் தேவைக்கேற்ப அவை மேலும் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.
பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் தரம், பல்கலைக்கழகத்தின் தலையாய இலக்கு என்பவற்றை இந்த ஆவணத்தில் விவரிக்கப்பட்டுள்ள தர உத்தரவாதக் கட்டமைப்பின் மொத்த செயற்பாடுகளும் உறுதிப்படுத்தப்படுகின்றன.

மேற்போந்த சட்டமானது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கு அமைவாக கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுவதனை உறுதிப்படுத்தும் முகமாக பல்கலைக்கழகப் பணியாளர்கள் யாவர் அவர்களது பொறுப்புகள் எவை என்பது பற்றியும் நிர்வாக குழுக்கள் பற்றியும் குறித்துரைக்கிறது. இந்நிர்வாக குழுக்கள் இலங்கையில் உள்ள ஏனைய பல்கலைக்கழகங்களின் நிர்வாகக் குழுக்களிலிருந்து எவ்விதத்திலும் வேறுபட்டவை அல்ல.

பல்கலைக்கழகப் பணியாளர்கள்

I. துணை வேந்தர்
II. பீடாதிபதிகள்
III. பணிப்பாளர் நாயகம்
IV. நிதிப் பணிப்பாளர்
V. ஊடகம், தகவற் பணிப்பாளர்
VI. அனுமதி, அங்கீகாரம், தர உத்தரவாதப் பணிப்பாளர்

நிர்வாகக் குழுக்கள்

I. ஆட்சிச் சபை
II. கல்விசார் பேரவை
III. அனுமதி, அங்கீகாரம், தர உத்தரவாத சபை
IV. பீடச்சபைகள் (மேற்குறித்த சபைகளின் அமைப்புத் தொடர்பாக குறித்த சட்டத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது)

தேவையான தரம் எவ்வாறு உறுதி செய்யப்படுகிறது என்பதை விளக்குவதற்கு இச்சபைகளின் செயற்பாடுகள் இங்கே சுருக்கமாக விவரிக்கப்படுகின்றன. கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள், தொழில்நுட்பப் பயிற்சிப் பீடம், தொழிற்துறை மற்றும் வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பப் பீடம் ஆகிய இரண்டு பீடங்களின் கீழ் நடத்தப்படுகின்றன. பாட அலகுகள், அவை வழங்கப்படும் முறை, பரீட்சைகள், மதிப்பீடு போன்றவற்றை உள்ளடக்கிய கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான அனைத்து விடயங்களையும் பீடச் சபைகள் கலந்தாலோசித்துக் கண்காணிக்கின்றன.

பீடச் சபைகளில் எடுக்கப்படும் பரிந்துரைகளும் முடிவுகளும் கல்விப் பேரவையின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும். கல்விப் பேரவை சூழ்நிலையையும் அப்பரிந்துரைகள், முடிவுகளின் கனதியையும் பொறுத்து ஆளுநர் குழுவின் ஒப்புதலைப் பெறலாம். கல்விப் பேரவை என்பது அதன் கட்டமைப்பு, செயற்பாடுகளைப் பொறுத்த வரையில் இலங்கையில் உள்ள மரபார்ந்த பல்கலைக்கழகங்களிலுள்ள மூதவைக்கு ஒப்பானதாகும்.

மாணவர் அனுமதி நடைமுறைகள், நிகழ்ச்சித்திட்டங்களின் அங்கீகாரம், ஆட்சேர்ப்புத் திட்டங்கள், பல்கலைக்கழகக் கல்லூரிகள் தொடர்பான கல்வி மற்றும் நிர்வாக விடயங்கள், பல்கலைக்கழகத்தின் பொதுவான தர உத்தரவாதச் செயல்முறைகள் பற்றிய முடிவுகளை எடுக்கும்போது அம்முடிவுகள் அனுமதி, அங்கீகாரம் மற்றும் தர உத்தரவாத சபையின் ஒப்புதலுக்காக அனுப்பப்படுகின்றன.

பல்கலைக்கழகத்தில் பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டு நிலையம் ஒன்று காணப்படுகின்றது. பரீட்சைகளை நடாத்துதல், கண்காணித்தல், விடைத் தாள்களைத் திருத்துதல், பெறுபேறுகளைப் பதிவு செய்தல், சான்றிதழ்களை வழங்குதல் ஆகியவற்றுக்கு இந்நிலையமே பொறுப்பாகும். இந்த நடைமுறைகள் இலங்கையில் உள்ள மற்ற பல்கலைக்கழகங்களின் நடைமுறைகளை ஒத்தவையாகும்.

பல்கலைக்கழகத்தில் தர உத்தரவாதக் குழு ஒன்றும் காணப்படுகிறது. இக்குழு மாதந்தக் கூட்டங்களை நடாத்தி கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் விதிகள், நியமங்களுக்கு அமைவாக நடத்தப்படுகின்றனவா என்பதை உறுதி செய்வதற்கான முயற்சிகளையும் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான வசதிகளையும் மாணவர் நலன்புரிச் சேவைகளையும் மேம்படுத்துவதற்கான முயற்சிகளையும் முன்னெடுக்கிறது. மேலும், இத்தர உத்தரவாதக் குழுவால் மாதாந்த முன்னேற்ற அறிக்கை ஒன்றும் கல்விப் பேரவைக்கு அனுப்பப்படுகிறது.
மேலே குறிப்பிட்ட அதிகாரிகளினதும் நிர்வாகக் குழுக்களதும் அனைத்து செயற்பாடுகளும் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட துணைச் சட்டங்கள், விதிமுறைகள், விதிகள், நடைமுறைகள் மற்றும் கொள்கைகளால் நிர்வகிக்கப்படுகின்றன.

மேற்குறித்த ஆவணங்கள் உள்ளடக்கும் விடயங்கள் கீழே தரப்படுகிறது

துணைச் சட்டங்கள்

- தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் பட்டங்கள், பட்டப்பின் டிப்ளோமாக்கள் மற்றும் உயர் பட்டங்கள் தொடர்பான துணைச் சட்டம்.
- பரீட்சைகளை நடாத்துதல், குற்றங்கள், தண்டனைகள் மற்றும் மேல்முறையீட்டு நடைமுறைகள் நடத்துவதற்கான தொடர்பான துணைச் சட்டம்.

- தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் உள்ள பல்கலைக்கழக மாணவர் பேரவைக்கான துணைச் சட்டம்
- தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் விடுதிகள் மற்றும் மாணவர் ஒழுக்கம் தொடர்பான துணைச் சட்டம்
- தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தகுதிச் சான்றிதழ்கள், தொடக்கநிலைச் சான்றிதழ்கள், சான்றிதழ்கள், உயர் சான்றிதழ்கள், டிப்ளோமாக்கள் மற்றும் உயர் டிப்ளோமா சான்றிதழ்கள் தொடர்பான துணைச் சட்டம்
- தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு நடைமுறை பற்றிய துணைச் சட்டங்கள்
- தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் கீழ் நிறுவப்பட்ட பல்கலைக்கழக கல்லூரிகளின் டிப்ளோமா வழங்கும் விழாவின் நடைமுறை பற்றிய துணைச் சட்டங்கள்

ஒழுங்குமுறைகள்

- தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தினால் தொழில்நுட்பத்தில் இளங்கல்விமாணிப் பட்டப்படிப்பினை வழங்குவதற்கான ஒழுங்குமுறைகள்
- தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தினால் தொழில்நுட்ப இளமாணிப் பட்டப்படிப்பினை வழங்குவதற்கான ஒழுங்குமுறைகள்
- தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தகுதிச் சான்றிதழ்கள், தொடக்கநிலைச் சான்றிதழ்கள், சான்றிதழ்கள், உயர் சான்றிதழ்கள், டிப்ளோமாக்கள் தொடர்பான ஒழுங்குமுறைகள்

விதிகள்

- தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தினால் தொழில்நுட்பத்தில் இளங்கல்விமாணிப் பட்டப்படிப்பினை வழங்குவதற்கான விதிமுறைகள்
- தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தினால் தொழிற்றுறைசார் மற்றும் வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணிப் பட்டப்படிப்பினை வழங்குவதற்கான விதிமுறைகள்
- தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் பீடாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான விதிமுறைகள்
- தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக மேன்முறையீட்டுச் சபையின் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான விதிமுறைகள்
- தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தகுதிச் சான்றிதழ்கள், தொடக்கநிலைச் சான்றிதழ்கள், சான்றிதழ்கள், உயர் சான்றிதழ்கள், டிப்ளோமாக்கள் மற்றும் உயர் டிப்ளோமா சான்றிதழ்கள் விதிமுறைகள்

நடைமுறைகள்

- நடைமுறை – அனுமதி நடைமுறையும் பதிவுசெய்தலும்
- நடைமுறை – விலக்களிப்புகள்
- நடைமுறை – விடைத்தாள்களின் பெறுபேறுகளை மீளாய்வுசெய்தல்
- துறை மட்டத்தில் வெளியிடப்படும் பரீட்சை முடிவுகளுக்கான நடைமுறை

கொள்கைகள்

- பணம் மீளச்செலுத்தும் கொள்கை

9.3 அங்கீகாரம்

பின்வரும் பட்டக் கற்கைகள் 2017இல் சிட்னி உடன்படிக்கையின்கீழ் இலங்கைப் பொறியியலாளர் நிறுவகத்தின் (IESL) அங்கீகாரத்தைப் பெற்றது.

- பொறி இலத்திரனியல் தொழில்நுட்பத்தில் இளங்கல்விமாணி
- கட்டட சேவைகள் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி
- உற்பத்தித் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி

முதல் இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களில் (கட்டுமானத் தொழில்நுட்பமும் வள முகாமைத்துவம் மற்றும் கணிய ஆய்வும்) கிடைத்த பரிந்துரைகளின்படி அடுத்த IESL மதிப்பாய்வுக்கு ஆயத்தமாவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

9.4 தர உத்தரவாதம்

பல்கலைக்கழகத்தின் AAQA பிரிவு பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் தர மேம்பாடு தொடர்பான நிகழ்ச்சிகளிலும் திறன் விருத்தி அமைச்சினாலும் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் நடாத்தப்படும் நிகழ்ச்சிகளிலும் ஆர்வத்துடன் பங்கேற்று வருகிறது.

செய்தி மடல்கள், இணைப் பாடவிதான செயற்பாடுகள், ஆய்வுக் கருத்தரங்குகள், அழகியல் நிகழ்ச்சிகள் போன்ற செயலாக்கங்கள், செயற்பாடுகள் மற்றும் நிகழ்வுகளில் இப்பிரிவு முனைப்புடன் பங்கேற்றது. இது போன்ற செயற்பாடுகளே ஒரு கல்வி நிறுவனத்தில் தரத்தை மேம்படுத்துகின்றன.

9.5 தொழிற் கல்வி, தொழிற் பயிற்சித் துறையில் தர மேம்பாட்டுக்கான தலைமைத்துவத்தை வழங்குதல்

பல்கலைக்கழகமானது மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவுடன் இணைந்து திறன்சார் துறை மேம்பாட்டுத் திட்டத்தின் அனுசரணையில் தர மேம்பாட்டு அமைப்புக்குப் (QIS) பெரும் பங்காற்றியுள்ளது.

10 தாபனப் பிரிவு

தாபனப் பிரிவானது பல்கலைக்கழகத்தின் கல்வி, கல்வி சாரா ஊழியர்களின் மனிதவள முகாமைத்துவ விடயத்தில் பல்கலைக்கழகத்துக்கு உதவுகிறது. இப்பிரிவின் முக்கிய தொழிற்பாடுகளாவன,

- பல்கலைக்கழகத்தின் வருடாந்த மனித வலு பற்றிய திட்டமிடல்
- வெற்றிடங்களை நிரப்புவதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள்
- ஆட்சேர்ப்பு / திறமையானவர்களை உள்வாங்கல்
- இழப்பீட்டு முகாமைத்துவம்
- வருடாந்தச் செயற்திறன் மதிப்பீடு
- மனித வளம் மற்றும் திறன் விருத்தி
- இறுதிப் பயன் முகாமைத்துவம்
- தொழிற்துறை உறவுகள்

பல்கலைக்கழகத்தின் தற்போதுள்ள மனித வளங்களின் உச்சப் பயன்பாட்டை இப்பிரிவு உறுதி செய்கின்றது. மேலும், திறமையான மனித வளங்களைப் பெற்றுக்கொள்ளும் வகையிலும் சிறந்த பயன்களைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு வேலை செய்வதற்குகந்த பணியிடச் சூழலை பல்கலைக்கழகச் சமூகத்துக்கு வழங்கும் வகையிலும் மூலோபாயத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

10.1 புதிய ஆட்சேர்ப்புகள் - 2020

பல்கலைக்கழகத்திற்கான ஊழியர்களை நியமிக்கும் அதிகாரம் ஆட்சியாளர் சபைக்கே காணப்படுகிறது. குறித்த சபையின் ஒப்புதலுடன் 2020ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்புகள் வருமாறு,

அட்டவணை 10.1: புதிய ஆட்சேர்ப்புகள் - 2020

#	பெயர்	பதவி	நியமனத் திகதி
1.	கலா. ஜே.கே.சி. திசாநாயக்க	ஆலோசகர்	03/03/2020
2.	திரு. எஸ்.பி.எஸ்.ஜி. தயானந்த	செய்முறை விரிவுரையாளர் (தற்காலிகம்)	02/10/2020
3.	முதுநிலைப் பேராசிரியர் ரஞ்சித் பிரேம்லால் டி சில்வா	துணைவேந்தர்	07/10/2020

கல்விசார் பணியாளர், நிர்வாகம் மற்றும் கல்விசாராப் பணியாளர் தரங்களின் பதவி வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான செயன்முறையைப் பல்கலைக்கழகம் தொடங்கியிருந்தபோதும் கொவிட் 19 பரவலால் ஏற்பட்ட தடங்கல்களின் காரணமாக அதனை நிறைவேற்ற முடியவில்லை.

10.2 2020ஆம் ஆண்டு நிகழ்ந்த பதவி விலகல்கள் / பதவி வெறிதாக்கங்கள் / ஒப்பந்த முடிவுறுத்தல்கள் / ஓய்வுகள்

2019 ஆம் ஆண்டில், வெவ்வேறு பதவியை வகித்து வந்த பதினொரு பணியாளர்கள் தங்கள் பதவி விலகல் கடிதங்களை வழங்கி பல்கலைக்கழக சேவையை விட்டு வெளியேறிய அதே நேரத்தில் பணியாளர் ஒருவர் தனது ஒப்பந்த காலத்தை முடித்து வெளியேறினார். அலுவலக உதவியாளர் ஒருவர் தன் விருப்பின் பேரில் பதவியை வெறிதாக்கிச் சென்றதோடு எழுத்தர் தரத்திலும் முதனிலைத் தரத்திலும் கடமையாற்றிய இரண்டு ஊழியர்கள் ஓய்வு பெற்றுக் கொண்டனர். இது பற்றிய சுருக்க விபரம் அட்டவணை 10.2இல் வழங்கப்பட்டுள்ளது

அட்டவணை 10.2: 2020ஆம் ஆண்டு நிகழ்ந்த பதவி விலகல்கள் / பதவி வறிதாக்கங்கள் / ஒப்பந்த முடிவுறுத்தல்கள் / ஓய்வுகள்

	பெயர்	பதவி	நியமனத் திகதி	பதவி விலகிய திகதி	காரணம்
1.	திரு. டபிள்யு. கே. லங்காபுர	செய்முறை விரிவுரையாளர்	16/03/2018	15/03/2019	ஒப்பந்த காலம் முடிந்தது
2.	திருவாட்டி. கே.எம்.பி.பி.என். பெரேரா	செய்முறை விரிவுரையாளர்	04/09/2018	31/01/2019	பதவி விலகல்
3.	திரு எஸ்.ஏ. ரஞ்சித்	முகாமைத்துவ உதவியாளர்	12/07/1999	04/04/2019	ஓய்வு
4.	திருவாட்டி. கே.பி.ஏ.ஜி டி சில்வா	இணை அலுவலர்	19/07/2005	30/04/2019	பதவி விலகல்
5.	திருவாட்டி. என்.டபிள்யு.கே.டி.வி.பி. ஒபத	விரிவுரையாளர் (தகுதிகாண் நிலை)	03/10/2014	14/04/2019	பதவி விலகல்
6.	திரு. டி.எஸ். ஹெட்டியாரச்சி	பணிப்பாளர் (MIS)	20/10/2011	30/04/2019	பதவி விலகல்
7.	திரு. கே.எம்.எஸ்.ஏ.டி. பண்டார	முதுநிலை விரிவுரையாளர் II	04/07/2013	04/07/2019	பதவி விலகல்
8.	திருவாட்டி. ஏ. ஹம்சப்பிரியா	செய்முறை விரிவுரையாளர்	26/03/2019	01/08/2019	பதவி விலகல்
9.	திரு. ஜி.ஜே. சதுன் சமீர	அலுவலக உதவியாளர்	06/07/2015	09/08/2019	பதவி வெறிதாக்கல்
10.	திரு. எஸ்.எஸ். விதானபத்திரண	அலுவலக உதவியாளர்	15/11/1999	20/08/2019	ஓய்வு
11.	திரு. பி.கே.பி. புஷ்பகுமார	விரிவுரையாளர்	02/10/2017	04/10/2019	பதவி விலகல்
12.	திருவாட்டி. எஸ்.சி.என். பெரேரா	விரிவுரையாளர் (தகுதிகாண் நிலை)	02/10/2017	02/10/2019	பதவி விலகல்
13.	திருவாட்டி. டபிள்யு.கே. மொரமுதலி	விரிவுரையாளர் (தகுதிகாண் நிலை)	01/07/2016	03/10/2019	பதவி விலகல்
14.	கலா. ஏ.எம். ஜஸீல்	முதுநிலை விரிவுரையாளர் II	01/11/2017	01/11/2019	பதவி விலகல்
15.	திரு. கே.யு.எம். டி சில்வா	முதுநிலை விரிவுரையாளர் II	15/03/2019	31/12/2019	பதவி விலகல்

10.3 கல்விசார், கல்விசாராப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட உள்ளகப் பயிற்சிகள் - 2020

பல்கலைக்கழகத்தின் மனித வள மேம்பாட்டுக் கொள்கைக்கு அமைய அறிவுக் காரணி, திறன் கூறு அல்லது திறன்களை மையமாகக் கொண்ட பயிற்சிகளுடன் பணியாளர்களுக்குப் பயிற்சி வாய்ப்பு வழங்கப்படுகின்றன. இப்பயிற்சி அமர்வுகளுக்கான பணியாளர்கள் அவர்களின் துறைத் தலைவர்களின் பரிந்துரைக்கமைய அவர்களின் வருடாந்தச் சம்பள அதிகரிப்புப் படிவங்களின் மதிப்பாய்வுகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அட்டவணை 10.3: 2020ஆம் ஆண்டு கல்விசார், கல்விசாராப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட உள்ளகப் பயிற்சிகள

	பயிற்சியின் பெயர்	திகதி	நிறுவனம் / பயிற்றுநர்	பயிலுநர்		பதவி	கற்கை நெறிக் கட்டணம் - ரூபாயில்
				தலை	பெயர்		

				ப்பு			
1	ஆறிவியல், பொருளாதார அடிப்படையிலானதும் பாதுகாப்பானதுமான வாகனம் ஓட்டும் கலைப் பயிற்சி	1/18/2020	CETRAC	திரு	எஸ்.டி. துமிந்தகுமார	சாரதி	3500x27000/=
				திரு	டி.எஸ்.டபிள்யு செனவிரத்ன	சாரதி	
2	IESL அங்கீகாரத்துக்குத் தயார்ப்படுத்துவதற்கான பயிற்சி	1/27/2020	IESL	கலா.	டி.டி.டி.சுரவீர	பீடாதிபதி /FIVT	5000x735,000/=
				திரு	ஏல்.டபிள்யு.எஸ். குலரத்ன	பீடாதிபதி /FTT	
				பொறி	ஜே.கே. காந்தி	முதுநிலை விரிவுரையாளர் II	
				கலா.	ஆர்.எல்.டபிள்யு. கொக்கல	முதுநிலை விரிவுரையாளர் I	
				கலா	ஜயலால் வெத்தசிங்க	முதுநிலை விரிவுரையாளர் II	
				திரு வாட்டி	பி.எம் பெரேரா	முதுநிலை விரிவுரையாளர் II	
				கலா.	ஏம்.பி.கே.சி.நந்தபால	விரிவுரையாளர்	
3	தனிநபர் கோவைகள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	2/11/2020	PRAG நிறுவகம்	திரு வாட்டி	ஆர்.ஏ.என்.டி. ரூபசிங்க	உள்ளகக் கணக்காய்வாளர்	7000x321000/=
				திரு வாட்டி	பி.எல்.கே. முத்துக்குமாரன	முகாமைத்துவ உதவியாளர்	
				திரு வாட்டி	என்.ரி.சி.ஜயம்பதி	முகாமைத்துவ உதவியாளர்	
4	பாதை வடிவமைப்பு, கட்டுமானம், பராமரிப்பு என்பன தொடர்பான சரியான வழிமுறைகள் தொடர்பான பயிற்சி	2/14/2020	CETRAC	திரு	கே.எல்.ஓ கொடித்துவக்கு	இணை அலுவலர்	5000/=
5	நடுத்தர மற்றும் தாழ் மின்னழுத்த நிறுவுதல்களை வடிவமைப்பது தொடர்பான செயலமர்வு	2/12/2020	CIDA	கலா.	ஆர்.எல்.டபிள்யு. கொக்கல	முதுநிலை விரிவுரையாளர் II	4000x28000/=
				பொறி.	டபிள்யு.சி.சி சுமதிரட்ண	முதுநிலை விரிவுரையாளர் II	
6	தரமான தலைவர் நிழ்ச்சித்திட்டம்	2020/02/25,26	வாழ்க்கைத் தொழில்சார்	திரு	ரி.சி. ஜயமுதுகே	தயாரிப்பாளர்	
				திரு வாட்டி	என்.பி.டபிள்யு.ஐ. உதேஷிகா	புள்ளிவிவர அலுவலர்	

	கட்டம் - 01		தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்	திரு	ஜி.டி.ஐ. புஷ்பகுமார	இணை அலுவலர்	
				திருவாட்டி	என்.ரி.சி. ஜயம்பதி	முகாமைத்துவ உதவியாளர்	
				திருவாட்டி	வி.வி. ரணதுங்க	முகாமைத்துவ உதவியாளர்	
				திரு	டி.டி.டபிள்யு. சிறிமான்ன	முகாமைத்துவ உதவியாளர்	
7	உள்ளகக் கணக்காய்வாளர்களின் பணி தொடர்பான பயிற்சிப் பட்டறை	2020/07/20,21,22,23	திறன்கள் துறை மேம்பாட்டுப் பிரிவு	திருவாட்டி	ஆர்.ஏ.என்.டி. ரூபசிங்க	உள்ளகக் கணக்காய்வாளர்	
				திரு	ஜி.பி.எல். பிரியஜானக	இணை அலுவலர்	
				திருவாட்டி	பி.எல்.கே. முத்துக்குமாரன	முகாமைத்துவ உதவியாளர்	
				திரு	எம்.எல்.ஏ சஞ்சீவ	அலுவலக உதவியாளர்	

11. நிர்வாகப் பிரிவும் அதன் கடமைகளும்

நிர்வாகப் பிரிவானது பணிப்பாளர் நாயகத்தின் மேற்பார்வையின்கீழ் உதவிப் பதிவாளரின் (நிர்வாகம்) உதவியுடன் பல்கலைக்கழகத்தின் சீரான செயற்பாட்டை உறுதி செய்யும் வகையில் செயற்படுத்தப்படுகிறது. பொது நிர்வாகப் பிரிவு பின்வரும் துணைப் பிரிவுகளைக் கொண்டுள்ளது

- போக்குவரத்து பிரிவு
- பராமரிப்பு பிரிவு
- பாதுகாப்பு
- துப்புரவுச் சேவை

11.1 போக்குவரத்து பிரிவு

வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் போக்குவரத்துப் பிரிவு மாணவர்களினதும் பணியாளர்களினதும் உத்தியோகபூர்வ போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. போக்குவரத்துப் பிரிவின் இடையறாச் சேவையை உறுதி செய்யும் வகையில் பொறுப்பதிகாரி ஒருவர் அமர்த்தப்பட்டுள்ளதோடு 05 பேர் கொண்ட சாரதி குழாமும் காணப்படுகின்றது. பொருப்பன சந்தியிலிருந்து அனைத்து ஊழியர்களுக்கும் மாணவர்களுக்கும் தினசரி போக்குவரத்துச் சேவை வழங்கப்படுகிறது.

11.2 துப்புரவுச் சேவை

பல்கலைக்கழகத்தின் துப்புரவு சேவைகள் முறையான விலைகூறல் நடைமுறையைப் பின்பற்றி, ஒரு வெளி மனிதவளச் சேவை நிறுவனத்தால் ஆண்டுதோறும் மேற்கொள்ளப்படுகின்றன. இத்துப்புரவுச் சேவை ஊழியர்கள் பல்கலைக்கழகத்தைச் சிறந்த முறையில் சுத்தம் செய்வதோடு பூந்தோட்டங்களையும் நன்கு பராமரிக்கிறார். மேலும், நிர்வாகப் பிரிவு அனைத்து சுகாதாரப் பணிகளும் வழக்கமான முறையில் மேற்கொள்ளப்படுகின்றனவா என கிரமமான ஆய்வுகளை மாதந்தோறும் மேற்கொள்வதோடு ஒரு மாதத்தில் செய்யப்பட்ட பணிகளை முழுமையாகப் பகுப்பாய்வு செய்த பிறகு கொடுப்பனவுகளுக்கான புள்ளிகள் வழங்கப்படும். இதன் மூலம் பல்கலைக்கழகத்தின் சுகாதார வசதிகளை முறையாக பராமரிக்க முடியும்.

11.3 பாதுகாப்பு

பல்கலைக்கழகத்தின் பாதுகாப்புச் சேவைகள் முறையான விலைகூறல் நடைமுறையைப் பின்பற்றி ஒரு வெளி மனிதவளச் சேவை நிறுவனத்தால் ஆண்டுதோறும் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் பதினேழு பகல்நேரக் கடமைக்கான பாதுகாப்பு ஊழியர்களும் பதினாறு இரவுநேரக் கடமைக்கான பாதுகாப்பு ஊழியர்களும் காணப்படுகின்றனர். பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு 2011ஆம் ஆண்டு முதல் கண்காணிப்புக் கமரா அமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. பாதுகாப்பு ஊழியர்களுக்கு பாதுகாப்புத் திட்டத்தின்படி கடமைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

2019ஆம் ஆண்டு ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னர் பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பணிப்பாளரின் தலைமையில் பல்கலைக்கழகத்தில் பல்வேறு படிநிலை ஊழியர்களைக் கொண்ட பாதுகாப்புக் குழு நியமிக்கப்பட்டது. பாதுகாப்புக் குழுவின் பரிந்துரைகளின்படி பல்கலைக்கழகத்தின் சுற்றுப்புறச் சுவர்களில் முட்கம்பிச் சுருள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும், ஊழியர்களின் அனைத்து விவரங்களும் சரிபார்க்கப்பட்ட பின்னர் வாகன நுழைவு அனுமதிச்சீட்டு வழங்கப்பட்டது. மேலும், பல்கலைக்கழகத்திற்குள் நுழையும் வெளி வாகனங்களின் அடையாளங்காணும் பொருட்டு மாணவர்களுக்கும் வாகன மற்றும் சைக்கிள் நுழைவு அனுமதிச்சீட்டு வழங்கப்பட்டது.

இந்த நடவடிக்கைகள் தவிர பல்கலைக்கழகத்திற்குள் நுழைபவர்கள் அனைவரையும் சோதனை செய்யும் பொருட்டு இரும்பு தொடர்பான பொருட்களைக் கண்டறியும் கருவி கொள்வனவு செய்பட்டு பயன்படுத்தப்பட்டதோடு பல்கலைக்கழகத்திற்குள் நுழையும் அனைத்து வாகனங்களையும் சோதனை செய்ய வாகன சோதனைக் கண்ணாடிகள் வைக்கப்பட்டன. மேலும், பிரதான வாயிலில் பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் காட்சிப்படுத்தப்பட்டதோடு அவைதொடர்பில் அனைத்து மாணவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது. 2020 மார்ச் மாதத்தில் ஏற்பட்ட கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக, பல்கலைக்கழகம் திடீரென மூடப்பட்டதையடுத்து பாதுகாப்புப் பணியாளர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது.

11.4 பராமரிப்புப் பிரிவு

பல்கலைக்கழகத்தின் அனைத்துக் கட்டுமானப் பணிகளும் அவற்றின் பராமரிப்பும் பணிப்பாளர் நாயகத்தின் வழிகாட்டுதலின்கீழ் பராமரிப்புப் பிரிவால் மேற்கொள்ளப்படுகிறன. பராமரிப்புப் பிரிவால் மேற்கொள்ளப்பட்ட மூலதனப் பணிகள் பற்றிய சுருக்க விவரம் பின்வருமாறு.

11.4.1 2019இல் தொடங்கப்பட்டு 2020இல் முடிக்கப்பட்ட கட்டுமானத் திட்டங்கள்

அ. தொடர் கல்வி மையத்தை (CEC) விரிவாக்கல், மாற்றங்களை மேற்கொள்ளல், திருத்துதல்

நிதி முதலீடு 11.7 மில்லியன் ரூபாய்

ஆ. பழைய பெண்கள் விடுதிக்கான திரைச் சீலைகளைப் பெற்றுத் தைத்துப் பொருத்துதல்

நிதி முதலீடு 0.39 மில்லியன் ரூபாய்

இ. நிதிக் கிளையையும் பரீட்சைக் கிளையின் களஞ்சிய அறையையும் திருத்தி விரிவாக்கல்

நிதி முதலீடு 2.76 மில்லியன் ரூபாய்

11.4.2 2017 இல் தொடங்கப்பட்டு தற்போதுவரை நடைபெற்று வரும் கட்டுமானத் திட்டங்கள

அ. கலைக்கூடம் மற்றும் வகுப்பறை கட்டடத்தின் வடிவமைப்பும் கட்டுமானமும் மீத வேலை

நிதி முதலீடு 75 மில்லியன் ரூபாய்

12 மீளாயப்பட்ட நிதிக் கூற்றுகள்

- நிதி நிலைக் கூற்று
- நிதிச் செயற்திறன் கூற்று
- காசுப்பாய்வுக் கூற்று
- கணக்கியல் கொள்கைகள்
- நிதிக் கூற்றுகளுக்கான குறிப

12.1.நிதி நிலைமைக் கூற்று

மார்கழி 31 இல் உள்ளவாறு	குறிப்பு	2020 ரூபா	2019 ரூபா
சொத்துக்கள்			
நடைமுறைச் சொத்துக்கள்			
காசு மற்றும் காசுக்கு சமமானவையும்	2	25,755,746	10,439,625
முற்பணங்கள், பெறவேண்டிய வைப்புக்கள்	3	177,420	220,772
இருப்புக்கள்		4,645,719	4,700,196
முற்பணங்கள்	4	1,315,466	1,717,372
உத்தியோகத்தர் கடன்களும் முற்பணங்களும்	5	6,593,810	6,267,425
கடன்பட்டவர்களும் ஏளைய பெறவேண்டியவைகளும்	6	1,723,246	13,328,709
		40,211,407	**36,674,099**
நடைமுறையில்லாத சொத்துக்கள்			
முதலீடுகள்	7	59,532,333	53,509,899
ஆதனங்கள்,பொறி மற்றும் உபகரணங்கள்	8	1,316,527,561	1,377,263,536
நடைபெற்றுவரும் வேலைகள் - கட்டடம்	9	328,364,573	332,425,919
பார்க்கமுடியாத சொத்துக்கள்	10	1,681,320	1,593,635
		1,706,105,787	**1,764,792,989**
மொத்தச்சொத்துக்கள்		**1,746,317,194**	**1,801,467,088**
பொறுப்புகள்			
நடைமுறைப் பொறுப்புகள்			
செலுத்த வேண்டிய கணக்குகள் மற்றும் ஏனைய பொறுப்புக்கள்	11	31,012,126	61,977,436
செலுத்த வேண்டிய குறுங்கால வைப்புக்கள்	12	6,553,850	9,664,160
குத்தகைக் கடப்பாடுகள்	13	2,213,157	1,963,235
		39,779,133	**73,604,831**
நடைமுறையல்லாப் பொறுப்புகள்			
பணிக்கொடைக்கான ஏற்பாடு	14	99,883,764	84,398,229
செலுத்த வேண்டிய நீண்டகால வைப்புக்கள்	15	40,601,000	36,511,000
குத்தகைக் கடப்பாடுகள்	16	6,582,444	8,795,601
		147,067,208	**129,704,830**
மொத்த பொறுப்புக்கள்		**186,846,341**	**203,309,661**
மொத்த தேறிய சொத்துக்கள்		**1,559,470,853**	**1,598,157,427**
தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதனம்			
மூலதனக் கொடை	17	1,607,737,816	1,640,989,558
மீள்மதிப்பீட்டு மிகை		28,639,667	29,436,320
திரண்ட நிதியம்	18	(77,529,942)	(72,887,763)
ஏனைய நிதியங்கள்	19	619,312	619,312
மொத்த தேறிய சொத்து /உரிமை		**1,559,470,853**	**1,598,157,427**

கணக்கியல் கொள்கைகள் பக்கங்கள் 6-10 வரையானதும் 11 தொடக்கம 23 வரையான குறிப்புக்களும் நிதிக்கூற்றுக்களின் அவசியமான பகுதியாக இருக்கின்றன.

தயாரிப்பு

.....

ஜி ஏ ஏ டில்றுக்சி
உதவிக் காசாளர்

உறுதிப்படுத்தல்

நாங்கள் மேலேயுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையானவை எனவும் 31.12.2018 இல் மிகை / பற்றாக்குறை என உறுதிப்படுத்துகின்றோம்.

....

சிரேஷ்ட பேராசிரியர் ரஞ்சித் பிறேமலால் டி சில்வா — A.P அலுத்கே
தகுதிவாய்ந்த ஆணையம் — நிதிப்பணிப்பாளர்

ஆளுனர் சபை நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் வெளிப்பாடுகளுக்கு பொறுப்பாக இருப்பதுடன் அவர்களினால் அனுமதியளிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கையப்பமிடப்பட்டுள்ளது.

....

சந்திரரத்தின விதானகே — சனத் பனவன்னகே
அங்கத்தவர் — அங்கத்தவர்

கொழும்பு
18 மாசி 2021

12.2 நிதிச்செயற்றிறன் கூற்று

மார்கழி 31 இல் உள்ளவாறு	குறிப்பு	2020 ரூபா	2019 ரூபா
செயற்பாட்டு வருமானம்			
மீண்டெழும் மானியம்		341,865,455	325,250,000
உத்தியோகத்தர் அபிவிருத்தி கொடை		131,500	717,990
திறன்கள் துறை அபிவிருத்தி கொடை	20	6,033,936	21,461,960
கல்விசார் நடவடிக்கையிலான வருமானம்	21	604,450	1,409,972
கழித்தல் - கல்விசார் நடவடிக்கைகள் நேரடிச்செலவு	22	211,950	276,841
கல்விசார் நடவடிக்கையிலான தேறிய வருமானம்		**392,500**	**1,133,131**
பட்ட நிகழ்ச்சித்திட்ட மூலமான வருமானம்	23	16,606,496	33,083,300
ஏனைய வருமானம்	24	7,923,451	10,544,923
பிற்போடப்பட்ட வருமானத்தின் காலக்கழிவு	25	91,629,588	109,710,340
மொத்த செயற்பாட்டு வருமானம்		**464,582,926**	**501,901,644**
செயற்பாட்டுச் செலவினம்			
ஊழியர் செலவுகள்	26	282,687,114	280,765,429
போக்குவரத்துச் செலவு	27	16,957	397,010
வழங்கல்களும் தேவைகளும்	28	6,158,735	8,699,219
பராமரிப்பு செலவினம்	29	6,597,895	6,934,987
சேவைகள	30	56,948,338	92,313,955
ஆதனம் , பொறி மற்றும் உபகரணம் - தேய்மானம்	31	93,156,884	111,373,251
திறன்கள் துறை அபிவிருத்திச் செலவுகள்	32	6,033,936	21,461,960
மொத்த செயற்பாட்டுச் செலவினங்கள் ஒதுக்கங்கள் மற்றும் நிலையான சொத்து விற்பனை நட்டத்துக்கு முன்னர்		451,599,859	521,945,811
தேறிய செயற்பாட்டுச் மிகை (பற்றாக்குறை) ஒதுக்கங்கள் மற்றும் நிலையான சொத்து விற்பனை நட்டத்துக்கு முன்னர்		12,983,067	(20,044,167)
பணிக்கொடை ஒதுக்கம்		17,621,246	52,266,417
நிலையான சொத்து விற்பனை நட்டம்		-	120,542
நிலையான சொத்து அன்பளிப்பு நட்டம்			-
தேறிய மிகை/ (பற்றாக்குறை) ஒதுக்கத்துக்கும் நிலையான சொத்து விற்பனை நட்டத்துக்கு பின்னர்		**(4,638,176)**	**(72,431,126)**

கணக்கியல் கொள்கைகளும் 06 - 10 வரையானதும் 11 தொடக்கம் 23 வரையான குறிப்புக்களும் நிதிக்கூற்றுக்களின் அவசிய மான பகுதியாக இருக்கின்றன.

12.3 காசுப்பாய்ச்சல் கூற்று

மார்கழி 31 இலான வருடமுடிவிற்கு	2020 ரூபா	2019 ரூபா
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்		
சாதாரண நடவடிக்கைகளிலிருந்தான பற்றாக்குறை/ மிகை	(4,638,179)	(72,431,126)
காசல்லாதவற்றின் அசைவுகள்		
பிற்போடப்பட்ட வருமானத்தின் காலக்கழிவு/மூலதன மானியம்	(91,629,588)	(109,710,340)
பெறுமானத்தேய்வு	93,156,884	111,373,251
சொத்து விற்பனை மூலமான இலாபம் / நட்டம்	-	120,542
சொத்து அன்பளிப்பு மூலமான இலாபம் / நட்டம	-	-
பணிக்கொடை	17,621,246	52,266,417
தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்	**14,510,363**	**(18,381,256)**
இருப்புகளின் (அதிகரிப்பு)/ குறைவு	54,477	(417,660)
பதவியணிக் கடன்பட்டோரிலான (அதிகரிப்பு)/ குறைவு	(326,385)	(294,231)
கடன்பட்டோர் மற்றும் பெறவேண்டியவையின் (அதிகரிப்பு)/ குறைவு	11,605,462	55,437,832
முற்கொடுப்பனவுகளின் (அதிகரிப்பு)/ குறைவு	401,906	2,049,066
முற்பண (அதிகரிப்பு)/ குறைவு	38,352	1,307,148
பெற வேண்டிய வைப்புக்களின் (அதிகரிப்பு)/ குறைவு	5,000	294,000
மீளச்செலுத்த வேண்டிய வைப்புக்களின் (அதிகரிப்பு)/ குறைவு	(3,110,310)	665,485
செலுத்தவேண்டிய கணக்குகள்	(30,965,309)	(63,373,215)
பணிக்கொடைக் கொடுப்பனவு	(2,135,711)	(2,075,215)
செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்	**(9,922,155)**	**(24,788,046)**
முதலீட்டு நடவடிக்கை இருந்தான காசுப்பாய்ச்சல் கூற்று		
நிலம்		
கட்டிடங்கள்	(22, 647,805)	(8,704,027)
கணனிகள்	(2,171,200)	(7,369,774)
தளபாடங்களும் பொருத்துக்களும்	(73,872)	(995,774)
அலுவலக உபகரணங்கள்	(1,432,865)	(355,900)
கற்பித்தல் உபகரணங்கள்	(4,103,665)	(18,914,947)
இயந்திர உபகரணங்கள்	(1,425,735)	(3,826,260)
புத்தகங்கள்	-	(1,855,524)
ஏனைய சொத்துக்கள்	(762,178)	(766,876)
நடைபெறும் வேலைகள்	4,061,346	(17,307,651)
பார்க்கமுடியாசொத்துக்கள்	(687,926)	(1,725,191)
முதலீடுகள்	(6,022,435)	(9,1083,322)
நூலக வைப்புக்கள்	2,045,000	3,570,000
ஆய்வுகூட வைப்புக்கள்	2,045,000	3,570,000
விடுதி வைப்புக்கள்	-	97,000
சொத்து விற்பனை மூலம் பெறப்பட்டவை	-	122,740
குத்தகை வாடகை	(1,963,235)	(1,198,814)
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்	**(33,139,570)**	**(64,844,320)**
நிதி நடவடிக்கை மூலமான காசுப்பாய்ச்சல்கள்		
மூலதன பங்களிப்பு - திறைசேரி	46,748,500	77,282,010
மூலதன மானியம்	11,629,346	11,802,245
திரண்ட நிதி	-	2,827,874
ஏனைய நிதியங்கள்	-	17,100
நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்கள்	**58,377,846**	**91,929,229**
காசு மற்றும் காசிற்குச் சமமானவைகளிலான தேறிய அதிகரிப்பு/(குறைவு)	15,316,121	2,296,863
காலப் பகுதியின் ஆரம்பத்தில் காசும் காசிற்குச் சமமானவையும்	10,439,625	8,142,762
காலப் பகுதியின் இறுதியில் காசும் காசிற்குச் சமமானவையும்	**25,755,746**	**10,439,625**

கணக்கியல் கொள்கைகளும் 06 - 10 வரையானதும் 11 தொடக்கம் 23 வரையான குறிப்புக்களும் நிதிக்கூற்றுக்களின் அவசியமான பகுதியாக இருக்கின்றன.

12.4 தேறிய சொத்திலான மாற்றங்கள் பற்றிய கூற்று

வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்

மீதி	திரண்ட நிதி ரூபா	மீள்மதிப்பீடு **மிகை** ரூபா	ஏனைய **நிதி** ரூபா	மூலதனக் கொடை **TEDP** ரூபா	**Treasury** ரூபா	**GOPA** ரூபா	**Ministry of YASD** ரூபா	**DTET** ரூபா	**NORAD** ரூபா	**SDP** ரூபா	**MOF** ரூபா	**SDD** ரூபா	**GIZ** **ரூபா**	**DIAKIN** **ரூபா**	**வருமான வேறுபாடு** ரூபா	மொத்த தேறிய சொத்து
01.01. 2019 இல் மீதி	**(3,563,532)**	**30,242,875**	**602,212**	**53,789,820**	**8,160,833**	**3,720**	**144,389,428**	**694,992,368**	**-**	**2,110,149**	**6,876**	**167,660,671**	**56,416**			**1,686,361,059**
சீராக்கம்	3,106,895	(806,555)						498,054	112,689	575,665						4,836,480
கழிவு				(16,964,986)	(2,274,167)	(1,860)	(12,066,465)	(10,006,143)	(62,858)	(1,096,708)		(1,372,134)	(6,600)	(140,158)		(109,710,341)
சேர்ப்பு			17,100						-			10,102,658		1,699,588		11,819,345
ஆண்டுப்பங்களிப்பு																77,282,010
மிகை / பற்றாக்குறை(25,112,634)																
பணிக்கொடை ஒதுக்கத்தின் கீழ்(47,318,492)																
மிகை / பற்றாக்குறை(மிழகளக் கூறப்பட்டது)	(72,431,126)															(72,431,126)
மீதி **31.12. 2019**	**(72,887,763)**	**29,436,320**	**619,312**	**36,824,834**	**5,886,667**	**1,860**	**132,322,963**	**685,484,279**	**49,831**	**1,589,106**	**6,876**	**176,391,195**	**49,816**	**1,559,430**		**1,598,157,427**
01.01. 2020 இல் மீதி	**(72,887,763)**	**29,436,320**	**619,312**	**36,824,834**	**5,886,667**	**1,860**	**132,322,963**	**685,484,279**	**49,831**	**1,589,106**	**6,876**	**176,391,195**	**49,816**	**1,559,430**		**1,598,157,427**
சீராக்கம்																
கழிவு		(796,653)		(7,407,493)	(1,382,500)	(310)	(11,811,680)	(9,227,816)	(49,430)	(483,891)		(2,974,257)	(6,600)	(243,111)		(92,426,241)
சேர்ப்பு												11,629,346				58,377,846
ஆண்டுப்பங்களிப்பு																
மிகை / பற்றாக்குறை	4,638,179)															(4,638,179)
மீதி **31.12. 2020**	**(77,525,942)**	**28,639,667**	**619,312**	**24,417,341**	**4,504,167**	**1,550**	**120,511,283**	**676,256,963**	**351**	**1,105,115**	**6,876**	**185,046,284**	**43,216**	**1,316,319**		**1,559,470,853**

கணக்கியல் கொள்கைகளும் 06 - 11 வரையானதும் 11 தொடக்கம் 23 வரையான குறிப்புக்களும் நிதிக்கூற்றுக்களின் அவசிய மான பகுதியாக இருக்கின்றன.

12.5 பாதீடு மற்றும் உண்மையான தொகைக்கான ஒப்பீட்டு கூற்று - 2020

வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்				
பாதீடு மற்றும் உண்மையான தொகைக்கான ஒப்பீட்டு கூற்று - 2020				
				இலங்கை ரூபாய்.
வகை	**அசல் பாதீடு**	**திருத்தப்பட்ட பாதீடு**	**உண்மையான தொகை**	**வேறுபாடு**
பெறுவனவுகள்				
அரசாங்கப் பங்களிப்பு	349,390,000	349,390,000	341,865,455	7,524,545
பல்கலைக்கழக வருமானங்கள்	30,200,000	24,100,000	24,057,538	42,462
திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	28,054,000	34,369,000	25,922,520	8,446,480
மொத்த பெறுவனவுகள்	**407,644,000**	**407,859,000**	**391,845,513**	**16,013,487**
கொடுப்பனவுகள்				
தனிப்பட்ட ஊதியங்கள்	291,580,000	291,370,000	288,697,338	2,672,662
பிரயாணம்	150,000	50,000	20,386	29,614
வழங்குதல்	7,050,000	5,920,000	5,316,407	603,593
பராமரிப்பு	6,000,000	7,200,000	5,901,907	1,298,093
சேவைகள்	74,010,000	68,650,000	60,044,423	8,645,577
ஏனையவைகள்	800,000	300,000	225,510	74,490
திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	28,054,000	34,369,000	25,922,520	8,446480
மொத்த செலவுகள்	**407,644,000**	**407,859,000**	**386,088,491**	**21,770,509**
தேறிய பெறுவனவுகள்/ கொடுப்பனவுகள்			**5,757,022**	

12.6. நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

12.6.1 முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்

பொது கொள்கைகள்

பிரவேசத்தினை அறிவித்தல்

வாழ்க்கைத் தொழில்சார் தொழிநுட்பவியல் பல்கலைக்கழகம் (இதன்பின்னர் பல்கலைக்கழகம் என குறிக்கப்படும்) ஆனது 2008 ஆம் ஆண்டின் அதிகாரச்சட்டம் 31 உடன் தொடர்புபட்டதாகவும் இல 100,கந்தவல, இரத்மலானை இல் அமைந்துள்ளதாகும்.

நிதியியல் காலப்பகுதி

பல்கலைக்கழகத்தினுடைய நிதியியல் காலப்பகுதி 01ந் திகதி தை 2020 தொடக்கம் 31ந் திகதி மார்கழி 2020 வரை.

முக்கிய செயற்பாடுகள்

(a) இளமானிக்கற்கையை நடாத்தல்.

(b) பட்ட மேற்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்தல்.

(c) TVETநிறுவனங்களுக்கான பாடவிதானத்தினை அபிவிருத்திசெய்தல்.

(d) இளமானிப்பட்ட பாடவிதானத்தினை அபிவிருத்தி செய்தல்.

(e) கற்றல் மூலவளங்களை அபிவிருத்தி செய்தல்.

(f) தொழில் விருத்திக்கான குறுகியகால பயிற்சி நிகழ்வுகள், செயலமர்வுகள், பயிற்சிபட்டறைகள் என்பவற்றினை நடாத்தல்.

(g) TVET கற்கை தொடர்பாக கல்வி ஆராய்ச்சிகளை நடாத்துதல்

தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு

பல்கலைக்கழகமும் அதன் இயலுமையும் தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு மற்றும் எதிர்பார்ப்புகளை அவற்றினுடைய வளங்களினூடாக எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் திருப்தி அடையச் செய்வதற்கான இயலுமை இருப்பதனை பல்கலைக்கழகம் உறுதிசெய்திருக்கின்றது. மேலும் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுக்கமைவாக நிதிக்கூற்றுக்களை தயாரித்திருக்கின்றது.

தயாரிப்பிற்கான அடிப்படை

(a) **இணக்கக்கூற்று**

நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன. அறியப்பட்டிருக்காதவையைத் தவிர ஏனையவை கணக்கியல் கொள்கைகள் முன்னைய காலப்பகுதிகளில் பயன்படுத்தப்பட்டவற்றுடன் ஒத்துப்போவதாகவுள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்து வெல்லும் எண்ணக்கருவுக்கு அமைவாக தயாரிக்கப் பட்டிருப்பதுடன் பல்கலைக்கழக முகாமைக்கு பல்கலைக்கழகத்தை எதிர்காலத்தில் கலைக்கும் எந்தவொரு நோக்கமும் இல்லை (2019).

(b)**மதிப்பீட்டு அடிப்படைகள்**

நிதிக்கூற்றுக்கள் வரலாற்றுக் கிரைய அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருப்புதுடன் குறிப்பிட்டு இருக்காதவற்றைத் தவிர ஏனையவற்றில் எந்தவொரு பெறுமதி மாற்றத்துக்காகவும் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(c)**தொழிற்பாட்டு நாணயம்**

நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் தயார் செய்யப்படுவதுடன் அவை நெருங்கிய ரூபாவுக்கு மட்டம் செய்யப்பட்டுள்ளது.

ஒப்பீட்டுத் தகவல்கள்

நடைமுறை வருடத்தில் சிறந்த வெளிப்பாட்டை வழங்குவதற்கு முன்னைய வருடத்துடன் தொடர்புடைய நிதிக் கூற்றுக்கள் விளக்கப்பாட்டை மேம்படுத்துவதற்கு ஒப்பீட்டுத் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டு இருக்கின்றன.

நிதிக் கூற்றுக்கள் வெளிப்படுத்தல் அல்லது பொருட்களின் வகைப்படுத்தல்கள் சீர்செய்யப்பட்டிருக் கின்றன, ஒப்பீட்டுத் தொகைகளும் நடைமுறை வருடத்துடன் உறுதி செய்து சிறந்த வெளிப்பாட்டை வழங்குவதற்கு மீள்வகைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

பொருள் மற்றும் திரட்டல்

நிதியியல் கூற்றுகளில் ஒத்த உருப்படிகளின் ஒவ்வொரு பொருள் வகுப்பும் தனித்தனியாக வழங்கப்படடுள்ளன. தன்மையில் ஒவ்வாத அல்லது தொழிற்பாடுகளில் வித்தியாசமான தன்மை கொண்டவை அவ்வாறு வகைப்படுத்தப்படவில்லை.

ஈடுசெயதல்

SLPSAS ஆல் தேவைப்படும் அல்லது அனுமதிக்கப்படாவிட்டால், சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் செலவுகள் ஈடுசெய்யப்படவில்லை.

12.7 சொத்துக்கள் மற்றும் அவைகளின் மதிப்பீட்டு அடிப்படைகள்

12.7.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

(a)**அங்கீகாரம் மற்றும் அளவீடுகள்** - ஆதனம்,பொறி மற்றும் உபகரணங்களை 12 ஐப்பசி 2009 க்கு பின்னர் பெறப்பட்டவை அவற்றின் கிரயத்தில் இருந்து திரண்ட பெறுமானத்தேய்வு நீங்கலாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

(b)**செலவு**- ஆதனம்,பொறி மற்றும் உபகரணங்கள் அவற்றின் கொள்வனவு விலை மற்றும் அதனைக் கொண்டு வந்து வேலைக்கு அமர்த்துவதற்கு இடையிலான அனைத்து செலவுகளையும் உள்ளடக்குகின்றது. அதே வேளை அச்சொத்தினை பெறுதல், புதுப்பித்தல் அல்லது முன்னேற்றலுடனான நிரந்தர தன்மை ஒரு மூலதனச்செலவாக கொள்ளப்படும்.

(C)**தேய்மானம்** - ஆதனம்,பொறி மற்றும் உபகரணங்களின் தேய்மானத்துக்கான ஏற்பாடு நேர்கோட்டு முறையில் கிரையம் அல்லது மதிப்பீட்டு பெறுமதியில் கீழேயுள்ள வீதங்களில் அவைகளினுடைய பயன்தரு ஆயுட்காலத்துக்கு கணிப்பிடப்படும்.

கட்டடம்	5 %
எல்லை சுவர்	5%
பவுன்ரைன்	5%
மோட்டார் வாகனங்கள்	25%
கணனி	16.66%
தளபாடம் மற்றும் பொருத்திகள்	10%
அலுவலக உபகரணம்	10%
பொறி மற்றும் இயந்திரம்	10%
கற்பித்தல் உபகரணங்கள்	10%
புத்தகங்கள்	10%
ஏனைய சொத்துக்கள்	16.66%

பெறுமானத்தேய்வு சொத்துக்களுக்கு கொள்வனவு செய்யும் வருடத்தில் முழு வருடத்துக்கும் பதிவளிக்கப்படுவதுடன் விற்பனை செய்யும் வருடத்தில் எவ்வித பெறுமானத்தேய்வும் பதிவளிக் கப்படுவதில்லை 31.12.2013 வரை. சொத்துக்கள் பாவனையின் தொடக்கத்தின் போது பெறுமானத் தேய்வளிக்கப்படுவதுடன் அவற்றின் பாவனை நிறுத்தப்படும் போது அவை விற்கப்படும் அல்லது நீக்கப்படும் 31.12.2013 தொடக்கம்.

செலவு தாபனக்குறியீட்டுக் கோவை பல்கலைக்கழகத்துக்காக உருவாக்கப்பட்டதுடன் ஏனைய சொத்துக்களும் முன்னேற்றத்துக்கு சாத்தியமாகும் போது நீக்கப்படும்..

12.7..2 சொத்தின் பெறுமதி மதிப்பீடு

(a) ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி இருந்து திரண்ட பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

(b)சொத்துக்களின் எதிர்பார்க்கப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் நியமனக்குழுவால் 2020 இல் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது.

	மீண்டும் ஆயள்காலம் தீர்மானிக்கப்பட்டது.
மோட்டார் வாகனங்கள்	3 வருடங்கள் 2020 இல் இருந்து, 2009 இல் கொள்வனவு செய்யப்பட்டது
	5 வருடங்கள் 2020 இல் இருந்து, 2011 இல் கொள்வனவு செய்யப்பட்டது
அலுவலக உபகரணங்கள்	3 வருடங்கள் 2020 இல் இருந்து, 2011 இல் கொள்வனவு செய்யப்பட்டது
தளபாடமும் பொருத்தியும்	3 வருடங்கள் 2020 இல் இருந்து, 2009 இல் கொள்வனவு செய்யப்பட்டது.
	5 வருடங்கள் 2020 இல் இருந்து, 2011 இல் கொள்வனவு செய்யப்பட்டது.
ஏனைய சொத்துக்கள்	3 வருடங்கள் 2020 இல் இருந்து, 2009 இல் கொள்வனவு செய்யப்பட்டது.
	3 வருடங்கள் 2020 இல் இருந்து, 2010 இல் கொள்வனவு செய்யப்பட்டது.
	3 வருடங்கள் 2020 இல் இருந்து, 2011 இல் கொள்வனவு செய்யப்பட்டது.
	3 வருடங்கள் 2020 இல் இருந்து, 2013 இல் கொள்வனவு செய்யப்பட்டது.
	3 வருடங்கள் 2020 இல் இருந்து, 2015 இல் கொள்வனவு செய்யப்பட்டது.
கற்பித்தல் உபகரணங்கள்	5 வருடங்கள் 2020 இல் இருந்து, 2009 இல் கொள்வனவு செய்யப்பட்டது.
	3 வருடங்கள் 2020 இல் இருந்து, 2011 இல் கொள்வனவு செய்யப்பட்டது.
கணனிகள்	2 வருடங்கள் 2020 இல் இருந்து, 2015 இல் கொள்வனவு செய்யப்பட்டது.
	4 வருடங்கள் 2020 இல் இருந்து, 2016 இல் கொள்வனவு செய்யப்பட்டது.
பொறி மற்றும் உபகரணம்	3 வருடங்கள் 2020 இல் இருந்து, 2010 இல் கொள்வனவு செய்யப்பட்டது.
	3 வருடங்கள் 2020 இல் இருந்து, 2011 இல் கொள்வனவு செய்யப்பட்டது.

குத்தகை- நிதிக் குத்தகை

குத்தகையானது உரிமையின் அனைத்து ஆபத்துக்களும் மற்றும் வெகுமதிகளும் பல்கலைக்கழகத்திற்கு பகுதியளவில் மாற்றப்படுவதாக பல்கலைக்கழகம் கருதுகின்றது, இதனை நிதிக் குத்தகை என வகைப்படுத்தப்படுகின்றது. ஆரம்ப அங்கிகாரத்தின் பேரில் மோட்டார் வாகனங்களின் கீழ் குத்தகைக்கு விடப்பட்ட சொத்து அதன் நியாயமான மதிப்பு மந்நும் குறைந்தபட்ச குத்தகை கொடுப்பனவுகளின் தற்போதைய மதிப்புக்கு சமமான தொகையில் அளவிடப்படுகின்றது. ஆரம்ப அங்கிகாரத்திற்குப் பின்னர் சொத்துக்குப் பொருந்தக் கூடிய கணக்கியல் கொள்கையின்படி சொத்து கணக்கிடப்படுகின்றது. நிதிக் குத்தகையின் கீழ் குறைந்தபட்ச குத்தகைக் கொடுப்பனவுகள் நிதிச் செலவுக்கும் நிலுவையிலுள்ள பொறுப்புக் குறைப்புக்குமிடையில் பிரிக்கப்படுகின்றன.

நடைபெற்றுவரும் மூலதன பணிகள்

நடைபெற்றுவரும் மூலதன பணிகள் கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவை சொத்து, பொறி மற்றும் உபகரணங்கள் நிர்மானிப்பதில் நேரடியாக செய்யப்படும் மூலதனச் செலவுகளாகும். நடைபெற்றுவரும் மூலதன பணிகள் பயன்பாட்டிற்கு பெறப்படும் போது தொடர்புடைய சொத்து வகைக்கு மாற்றப்படும்.

இருப்புக்கள்

இருப்புக்கள் இழிவுச்செலவுடன் கூறப்படுகின்றது. தேறிய நம்பத்தகு பெறுமதி எதிர்பார்க்கப்பட்ட விற்பனைப் பெறுமதியில் இருந்து தீர்மானிக்கப்பட்ட செலவு மற்றும் விற்பனைச் செலவுகள் என்பவற்றை நீக்குவதன் மூலம் தீர்மானிக்கப்படுகின்றது.

12.7.3 ஒய்வு பெறுபவர்களுக்கான பணிக்கொடை ஒதுக்கம்

ஓய்வு பெறுபவர்களுக்கான பணிக்கொடை ஒதுக்கம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தில் சேவையாற்றியிருக்கின்ற எல்லா ஊழியர்களுக்கும் 1983ம் ஆண்டின் 12ம் இலக்க பணிக்கொடை சட்டத்தினுடைய கொடுப்பனவின் படி வழங்கப்படுகின்றது. இக்கொடுப்பனவு தொடர்ச்சியாக 5 வருட சேவையை நிறைவு செய்யும் ஊழியர்களுக்கு மாத்திரம் கொடுக்கப்பட வேண்டிய பொறுப்பு உள்ளது. இப்பொறுப்பானது வெளியக நிதியளிக்கப்பட்டிருக்கவில்லை இது உண்மையாக பெறுமதியளிக்கப்பட்டிருக்கிறது.

இப்பொறுப்பு வெளியிலிருந்து நிதியளிக்கப்படவில்லை உண்மையாக பெறுமதியளிக்கப்படுகின்றது.

12.7.4 அரச கொடையும் மானியமும்

அரச மானியங்கள் பல்கலைக்கழகத்தினுடைய செலவுகளை ஈடுசெய்வதற்கு பயன்படுத்தப்பட்டு ஆவணப்படுத்தப்படுகின்றது. மீண்டெழும் தன்மையுள்ள மானியங்கள் வருமானமாக நிதிச்செயற்றிறன் கூற்றில் அங்கீகாரம் செய்யப்படுகின்றது. மூலதனத் தன்மை கொண்ட மானியங்கள் பிற்போடப்பட்ட வருமானத்துக்கும் செலவு செய்யப்படுவதுடன் amortized வருடாந்தம் சீரானடிப்படையில் தொடர்புடைய சொத்தின் பயன்தரு ஆயுட்காலத்துக்கு செய்யப்படும்.

12.7.5 நிதிசார் செயற்றிறன் கூற்று

வருமான அங்கீகாரம்

a) மீண்டெழும் கொடையிலிருந்தான வருமானம் பற்றுச்சீட்டுடன் அங்கீகாரம் செய்யப்பட்டிருந்தது.
b) திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டதில் இருந்து பெறப்பட்ட கொடை நிலுவைஅடிப்படையில் அங்கிகாரம் செய்யப்பட்டுள்ளது.
c) கற்கைநெறி மற்றும் டிப்ளோமா கட்டணங்கள் பற்றுச்சீட்டுடன் அங்கீகாரம் செய்யப்பட்டிருந்தது.
d) ஆலேசனை வருமானம் அச்செயற்பாடுகளின் நிறைவின் போது வருமானமாக அங்கீகரிக்கப்படிருக்கிறது.
e) ஏனைய வருமானம் நிலுவை அடிப்படையில் அங்கீகரிக்கப்படிருக்கிறது.

செலவு

பல்கலைக்கழக நாளாந்த நடவடிக்கை மூலமான எல்லா செலவுகளும் மற்றும் ஆதனங்கள்,பொறிகள் மற்றும் உபகரணங்களை வினைத்திறனாக பராமரிக்கப்பட்டிருப்பதுடன் அவை வருமானக் கூற்றின் அவ்வாண்டு மிகையை அல்லது பற்றாக்குறையை கணக்கிடும் போது பதிவளிக்கப்பட்டிருக்கின்றது.

காசுப் பாச்சல் கூற்று

காசுப் பாச்சல் கூற்று நேரில் முறையைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டிருப்பதுடன் காசு மற்றும் காசுக்கு சமமானவையும் பல்கலைக்கழக வங்கிக்கணக்கு மீதிகளைக் கொண்டிருக்கின்றன.

கண்டுபிடிப்புக்கள்

பரீட்சை மீதிக்கு பிந்திய நடவடிக்கைகள்

பரீட்சை மீதிக்கு பிந்திய நடவடிக்கைகள் எவையும் நடைபெறவில்லை அவை சீராக்கல் அல்லது கண்டுபிடிக்கப்பட்டவையாக நிதிக்கூற்றுக்களில் செய்யப்டவில்லை.

12.7 நிதிக் கூற்றிலான குறிப்புகள்

	மார்கழி 31 இலான வருடமுடிவிற்கு	2020	2019
		ரூபா	ரூபா
2	**வங்கி மீதிகள்**		
	இலங்கை வங்கி - இரத்மலானைக/கு 0070308457	7,846,705	6,192,348
	மக்கள் வங்கி-இரத்மலானைக/கு080-1-001-3-0003120	7,420,041	3,031,499
	அழைப்பு வைப்புக்கள் - இலங்கை வங்கி - இரத்மலானை (TESS Project)	10,489,000	1,215,778
		25,755,746	**10,439,625**
3	**முற்பணம், முன்செலுத்தல், பெறக்கூடியவைப்பு**		
	நானாவித முற்பணங்கள்	60,000	98,352
		60,000	**98,352**
	பெறக்கூடிய பணவைப்புகள்		
	SLTB இரத்மலானை	17,420	17,420
	கொழும்பு பல்கலைக்கழகம்	-	5,000
		17,420	**122,420**
		17,420	**220,772**
4	**முற்கொடுப்பணவுகள்**		
	காப்புறுதியும் பதிவுக்கட்டணமும்	420,974	424,625
	வரி மற்றும் தீர்வை	33,555	-
	பராமரிப்பு - கணனி, அச்சுப்பதிவு இயந்திரம் / குளிரூட்டிகள்,தூக்கி	805,025	1,245,465
	செய்திப்பத்திரிகையும் தொடர் சஞ்சிகையும்	55,912	47,232
		1,315,466	**1,717,372**
5	**ஊழியர் கடன்களும் முற்பணமும்**		
	இடர்க் கடன்கள்	6,593,810	6,258,675
	பண்டிகை முற்பணம்	-	8,750
		6,593,810	**6,267,425**
6	**கடன்பெற்றோர் மற்றும் பெறவேண்டியவை**		
	சொத்துகளின் வாடகை வருமானங்கள்-விடுதி	117,000	339,300
	நிலையான வைப்பு வட்டி	687,473	1,857,398
	அழைப்பு வைப்பு வட்டி	2,299	359,904
	மாணவர் நலன்புரி	275,428	358,891
	பி எம் யு எஸ் முதலிகே	3,400	3,400
	பி.ஏ.கே கணநாத்	7,000	7,000
	சீ ஜே அபயவிக்கிரம	-	186,374
	திறன்கள் துறைசார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	630,646	10,216,442
		1,723,246	**13,328,709**
7	**முதலீடுகள் (மீளச்செலுத்த வேண்டிய வைப்புக்கள்)**		
	மக்கள் வங்கி - இரத்மலானை	36,531,229	36,451,355
	இலங்கை வங்கி - இரத்மலானை	23,001,004	17,058,544
		59,532,333	**53,509,899**

நிதிக் கூற்றிலான குறிப்புகள்

சொத்துக்கள், பொறி மற்றும் உபகரணம்.

8

		1/1/2020 இலான மீதி ரூபா.	சீராக்கம் ரூபா.	சேர்ப்பு ரூபா.	கழிவுகள் ரூபா.	31/12/2020 இலான மீதி ரூபா.
8.1	**புனரமைப்பும் முன்னேற்றமும்**					
	காணி	4,633,190				4,633,190
	கட்டடம்	171,545,758		7,311,778		178,853,638
	பிரதான கட்டடம்	17,601,164				17,601,164
	மோட்டார் வாகனம்	569,931				569,931
	கணனிகள்	16,500				16,500
	தளபாடம் மற்றும் அலுவலக உபகரணம்.	5,386,336				5,386,336
	பொறி மற்றும் இயந்திரம்	157,052				157,052
	எல்லைச் சுவர்கள்	874,486				874,486
	புத்தகங்கள்	225,000				225,000
	ஏனைய சொத்துக்கள்	432,035				432,035
				-		
8.2	**நிலையான சொத்துக்களின் கொள்வனவு**			-		
	காணி மற்றும் அபிவிருத்தி	609,880,843				609,880,843
	கட்டடம்	558,103,932				558,103,932
	univotec பவுன்ரென்	11,190,627				11,190,627
	மோட்டார் வாகனம்	45,075,000			(1,200,000)	43,875,000
	குத்தகை வாகனம்	11,957,650				11,957,650
	கணனிகள்	90,349,093		2,171,200		92,520,293
	தளபாடம் மற்றும் பொருத்திகள்	72,106,452		73,872		72,180,324
	அலுவலக உபகரணம்.	53,303,973		1,432,865		54,738,838
	கற்பித்தல் உபகரணம்.	344,035,495		4,103,665		340,139,160
	பொறி மற்றும் இயந்திரம்	132,168,143		1,425,735		133,593,878
	புத்தகங்கள்	40,234,296		-		40,234,296
	ஏனைய சொத்துக்கள்	16,962,844		762,178		17,725,022
	மொத்தம்	**2,186,809,800**	**-**	**17,281,393**	**(1,200,000)**	**2,202,891,192**

சொத்துக்கள், பொறி மற்றும் உபகரணம் SSD

		1/1/2020 இலான மீதி ரூபா.	சீராக்கம் ரூபா.	சேர்ப்பு ரூபா.	கழிவுகள் ரூபா.	31/12/2020 இலான மீதி ரூபா.
8.1.a	**புனரமைப்பும் முன்னேற்றமும்**					
	கட்டடம்	6,992,138		15,335,927		22,228,065
8.2.a	**நிலையான சொத்துக்களின் கொள்வனவு**					
	தளபாடம் மற்றும் பொருத்திகள்	537,342				537,342
	அலுவலக உபகரணம்.	1,322,720				1,322,720
	கற்பித்தல் உபகரணம்.	2,425,999				2,425,999
	பொறி மற்றும் இயந்திரம்	5,496,450				5,496,450
	கணனி	5,780,849				5,780,849
	ஏனைய சொத்துக்கள்	2,002,336				2,002,336
	மொத்தம்	24,557,834	-	15,335,927	-	39,893,761
	மொத்த தேறிய பெறுமதி	**2,211,367,634**		**32,617,320**	**(1,200,000)**	**2,242,7684,963**

		1/1/2020 இலான மீதி ரூபா.	சீராக்கம் ரூபா.	சேர்ப்பு ரூபா.	கழிவுகள் ரூபா.	31/12/2020 இலான மீதி ரூபா.
	தேய்மானம்					
8.3	**புனரமைப்பும் முன்னேற்றமும்**					
	கட்டடம்	29,141,725		8,884,463		38,026,188
	பிரதான கட்டடம்	4,943,633		880,058		5,823,691
	மோட்டார் வாகனம்	569,931				569,931
	கணனிகள்	16,500				16,500
	தளபாடம் மற்றும் அலுவலக உபகரணம்.	1,883,523		538,634		2,422,157
	பொறி மற்றும் இயந்திரம்	122,114		15,705		137,819
	எல்லைச் சுவர்கள்	568,416		43,724		612,140
	புத்தகங்கள்	225,000				225,000
	ஏனைய சொத்துக்கள்	484,927	**(152,892)**	-		432,035
				-		
8.4	**நிலையான சொத்துக்களின் கொள்வனவு**			-		
	கட்டடம்	262,927,802	773,232	27,131,964		290,832,996
	univotec பவுரெயின்	5,595,314		559,531		6,154,845
	மோட்டார் வாகனம்	31,211,598	23,420	5,782,795	(1,200,000)	35,814,813
	குத்தகை வாகனம்	1,539,782		2,969,413		4,529,166
	கணனிகள்	59,234,656		7,222,515		66,467,170
	தளபாடம் மற்றும் பொருத்திகள்	47,351,280		4,207,089		51,558,308
	அலுவலக உபகரணம்.	45,601,430		2,403,144		48,004,573
	கற்பித்தல் உபகரணம்.	244,375,396		15,804,390		260,179,785
	பொறி மற்றும் இயந்திரம்	45,968,534		10,838,078		56,806,613
	புத்தகங்கள்	30,577,890		1,933,825		32,511,715
	ஏனைய சொத்துக்கள்	14,110,843	52,892	347,061		14,510,750
	மொத்தம்	**826,450,264**	**796,662**	**89,582,387**	**(1,200,000)**	**915,629,302**

தேய்மானம் SSD

		1/1/2020 இலான மீதி ரூபா.	சீராக்கம் ரூபா.	சேர்ப்பு ரூபா.	கழிவுகள் ரூபா.	31/12/2020 இலான மீதி ரூபா.
8.3.a	**புனரமைப்பும் முன்னேற்றமும்**					
	கட்டடம்	1,753,980		988,254		2,742,233
8.4.a	**நிலையான சொத்துக்களின் கொள்வனவு**					
	தளபாடம் மற்றும் பொருத்திகள்	268,671		53,734		322,405
	அலுவலக உபகரணம்.	661,360		132,272		793,632
	கற்பித்தல் உபகரணம்.	1,219,333		242,600		1,461,933
	பொறி மற்றும் இயந்திரம்	1,925,259		549,645		2,474,904
	கணனிகள்			963,475		963,472
